மத்திய மாகாண சபை – 2024 ஆம் ஆண்டு

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2025 யூன் 23 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை -	பரிந்துரை
(அ)	2018 மே 10 ஆம் திகதிய 265/2018 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02,03 பிரிவின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கு நியமங்களை பின்பற்றி அட்டுறு அடிப்படையில் கணக்கீட்டு முறைமை பயன்படுத்துவதன் ஊடாக அரச துறையின் கணக்குகளை தரமான நிதி கணக்கீடு ஒன்று மற்றும் அறிக்கை இடுவதற்கான சட்டகமொன்றை வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் இச்சுற்றறிக்கை வழங்கப்பட்டு 07 ஆண்டுகளுக்கு அண்மைத்த காலம் கடந்திருந்த போதும் இதுவரை மத்திய மாகாண சபையால் அனைத்து நிறுவனங்களுக்கும் நிதிக் கணக்கீடு மற்றும் அறிக்கையிடுவதற்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டு இருக்கவில்லை.	பொதுத் திறைசேரியின் இலங்கை அரச கணக்குகள் திணைக்களத்தின் மூலமும் இந்த மாற்றங்களை மேற்கொள்ளப்பட்டவுடன் மத்திய மாகாணத்தில் உரிய மாற்றங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன்	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கபபட வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டில், சாதாரண கல்வி நவீனமயப்படுத்தல் திட்டத்தின் (GEMP) கீழ் பாடசாலைக் கட்டிடங்களைக் நிர்மாணிப்பதற்காக ரூபா. 162,134,972 மற்றும் கணினிகள் மற்றும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா. 28,297,885 என மொத்தம் ரூபா. 190,432,857 செலவிடப்பட்டது, ஆனால் அது நிதி அல்லாத சொத்துக்களின் கூற்றில் கையேற்றலல்களின் கீழ் காட்டப்படவில்லை.	எதிர்காலத்தில், துல்லியமான கணக்கீடு செய்வதற்கு உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்பதாக தெரிவித்துக் கொள்கிறேன்.	திணைக்களத்திற்குச் சொந்தமான ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு, மதிப்பிடப்பட்டு, கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(இ)	மாகாண விளையாட்டுத் திணைக்களத்திற்குச் சொந்தமான விளையாட்டு வளாகம், உள்ளக விளையாட்டு அரங்கம், பிரதான கேட்போர் கூடம், விளையாட்டு மைதானம், சாப்பாட்டு மண்டபம், நீச்சல் குளம், உடற்பயிற்சி நிலையம், மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் 15 வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் 40 கோட்டக் கல்வி அலுவலகங்களின் காணி மற்றும் கட்டிட பெறுமதி, 1461 மாகாண சபை பாடசாலைகளின் காணி , கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான 02 உத்தியோகபூர்வ விடுதிகளின் சொத்துக்கள் ஆகியவை மதிப்பிடப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	தொடர்புடைய மதிப்பீடு நடவடிக்கைகள் மற்றும் கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.	திணைக்களங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் இறுதியில் எதிர்பாராத சந்தர்ப்ப நிதியின் பெறுமதி ரூபா 26,456,313 ஆக இருந்த போதிலும், மத்திய மாகாண சபையின் இறுதிக் கணக்கின் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா. 173,057,518 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதி அல்லாத சொத்துக்கள் ஒதுக்க நிதியம் மற்றும் தொழில்பாட்டு மிகை ரூபா 146,601,205 ஆல் கூடுதலகக் குறிப்பிடப்பட்டடிருது.	கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதில் பிழை ஏற்பட்டுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.	சரியான பெறுமதியைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தன் ரூபா. 104,936,000 பெறுமதியான காணியொன்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்படவில்லை.	கையேற்றல் செயல்முறை நடந்து வருகிறது.	சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கிடப்பட வேண்டும்.
(ஊ)	கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தால் கையகப்படுத்தப்பட்ட 29 பிராந்திய மருத்துவமனைகளின் 28 ஏக்கர் 02 பேர்ச் காணிகளின் பெறுமதி, கையேயற்கப்படாத 88 பிராந்திய	காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பிடு செய்வதற்கும் மதிப்பீட்டுப் பணிகளை முடிப்பதற்கும் ஒரு குழுவை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது,	சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின்

	மருத்துவமனைகளின் காணிகளின் மபெறுதி நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் மற்றும் 62 இணைக்கப்பட்ட மருத்துவமனைகளின் காணிகளின் பெறுமதி , கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா சுகாதார சேவைகள் அலுவலகங்கள் மற்றும் 216 இணைக்கப்பட்ட மருத்துவமனைகளின் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண்ங்களின் பெறுமதிபஆகியவை மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	மேலும் இதற்குத் தேவையான அடிப்படைத் தகவல்கள் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.	பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	மாகாண வீடமைப்புத் திணைக்களத்திற்கு மாகாண திட்டவட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 11.25 மில்லியனும், பிராந்திய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ரூபா 3.75 மில்லியனுமாக மொத்தம் ரூபா 15 மில்லியன். தொகை 2005 ஆம் ஆண்டு பிராந்திய அபிவிருத்தி வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட ‘‘சஹன் பியச’’ சுழற்சி நிதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மீதி ரூபா. 5,693,721 மற்றும் கடன் மீதி ரூபா 7,431,456 என மொத்தம் ரூபா 13,125,177 மீதியாக இருந்தன. அதன் பிரகாரம் சுழற்சி நிதியின் மீதி ஆண்டுதோறும் படிப்படியாக அதிகரிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா . 1,874,823 தொகையால் குறைவடைந்த மைற்கான காரணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வில்லை.	கணக்குகளுக்குரிய சான்றுகளை வங்கியால் வழங்கப்பட்டவுடன் கணக்காய்விறகு சமர்ப்பிக்கப்படும் என்பதையும், எதிர்வரும் ஆண்டுகளில், குறிப்பிட்ட நேரங்களில் தனித்தனி நிதிக்கூற்றுத் தொகுதிகளாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.	தொடர்புடைய சான்றுகள் உறுதிப்படுத்தலுக் காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஏ)	2014 ஆம் ஆண்டின் போது ரூபா. 8,875,040 செலவில் மாகாண சபை தொக்தியில் நிறுவப்பட்ட 45 கிலோவாட் இயலளவுடன் இணைக்கப்பட்ட சூரிய மின் உற்பத்தி அமைப்பின் பெறுமதி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் CSCA-6 அறிக்கையில் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படவில்லை.	இந்த முறைமைக்குரிய அனைத்து கூறுகளும் என்ன என்பது குறித்து ஒரு குழு மூலம் முறையான உறுதிப்படுத்தலைப் பெற்ற பிறகு, எதிர்காலத்தில் இந்த அமைப்பு எவ்வாறு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பது குறித்து எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை களை குறித்துக் கொண்டுள்ள தாக அறிய தருகின்றேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	ஆளணி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஊஐபுயுளு திட்டம் மற்றும் CSCA-6 நிதி அல்லாத சொத்துக்களின்படி நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 163,611,453 ஆக இருந்த போதிலும், நிதி நிலைமை தாடர்பாள கூற்றல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 40,446,000 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின ் மீதி ரூபா 123,165,453 என குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.	ஏற்றுக்கொள்கிறேன்	சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஓ)	மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் 19 உப நிறுவனங்களால் பராமரிக்கப்படும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் அடையாளம் காணப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஔ)	மாகாண வீதி அபிவிருத்தி , போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு வசதி மற்றும் நிர்மான அமைச்சகக் கட்டிடத்தில் ரூபா ரூபா 4,479,000 செலவில் 25 கிலோவாட் மற்றும் ரூபா 1,075,657 செலவில் 5 கிலோவாட் இயலளவுடைய ட 02 சூரிய சக்தி பேனல் அமைப்புகள் நிறுவப்பட்டிருந்த போதிலுலும், அதனை நிதிக்கூற்றுக்களில் ஒரு சொத்தாகக் கணக்கீடு செய்யப்ப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நிதிக கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க்)	"சஹன் பியச சுழற்சி நிதியத்திலிருந்து கடன் வழங்கி நிலுவையில் உள்ள கடன் நிலுவை ரூபா 7,431,456 என கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், தனிநபர் கடன் மீதிகளின் பட்டியல், கடன் காலப்பகுப்பாய்வு, நிலுவையில் உள்ள கடன்களின் விவரங்கள் மற்றும் பதிவழிக்கப்பட்ட கடன்கள் தொடர்பான கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	தற்போது கடன் மீதிகளை பதிவழித்தமை தொடர்பாக எந்த அறிக்கையும் இல்லை என்றாலும், கடன்பட்டோரின் மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வை வங்கி யிடமிருந்து தேவையான நிதித் தரவைப் பெற்று, எதிர் காலத்தில் வழங்க நவடிக்கை எடுப்பேன் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.	தொடர்புடைய மீதிகள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(க)	மாகாண பிரதான மற்றும் கல்வி அமைச்சின் நிதி சாராத சொத்துக்களின் அறிக்கையில் மீளய்வாண்டின் ,றுதி திகதியில் உள்ளவாறு பயணிகள் வாகனங்களின் பெறுமதி ரூபாபா 71,600,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், கணிகாய்விற்க்காக சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்களின் விவரங்களின்படி, அது ரூபா. 45,658,037 ஆக இருந்தது, இதன் விளைவாக ரூபாபா 25,941,963 முரண்பாடு ஏற்பட்டது.	2 பயணிகள் வாகனங்களின் பெறுமதிபகள் நீக்கப்பட்டு, புதிய மதிப்பீட்டை ப்பட்ட பெறுமதி கணக்கீடப்பட்டதால் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்..
(கா)	கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் பராமரிக்கப்படும் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தை ஒழுங்குபடுத்து வதற்காக மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சாசனம் அல்லது விதிக் கோவையொன்றை 2025 மார்ச் 18 வரையிலும தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தின் மீதி, காசேட்டின்படி, ரூபா	எதிர்காலத்தில், மத்திய மாகாண சபை செயலாளருக்கும், மத்திய மாகாண ஆளுநரின் செயலாளருக்கும் அங்கீகாரத்தி க்காக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	மாகாண கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தை ஒழுங்குபடுத்து வதற்காக மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சாசனம் அல்லது விதிக்

	20,090,181 ஆக இருந்தது. மேலும் இந்த நிதியத்தால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 40,000,000 கடன்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை, மேலும் இந்த நிதியம் தொடர்பாக மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்களில் இதுவரை எந்த வெளிப்படுத்தலும் செய்யப்படவில்லை.		கோவையொன்றை தயாரிப்பதற்கும் அந்நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(கி)	மாகாண பிரதான மற்றும் கல்வி அமைச்சினால் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணச் செலவுப் விடயத்தின் கீழ் பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 45,845,985 பெறுமதி நிதி அல்லாத சொத்துக்களின் கூற்றில் (CSCA 6) பாடசாலைக் கட்டிடங்களை கையேற்றல் (குறியீடு இலக்கம் 6111202) இன் கீழ் கணக்கிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அது பதிவு செய்யப்படாத காரணத்தால், மீளாய்வு ஆண்டிற்கான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி அந்த பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கு)	தலைமைச் செயலகத்திற்குச் சொந்தமான 14 கட்டிடங்கள், உத்தியோகபூர்வ விடுதிகள் உட்பட, அந்தக் கட்டிடங்கள் அமைந்துள்ள காணியின் பெறுமதி, CSCA-6 அறிக்கை மற்றும் சிகாஸ் திட்டத்தில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யடப்படவில்லை.	கையேற்கப்படுத்தப்படாத சொத்துக்களை கையேற்ற பிறகு, சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் சிகாஸ் மென்பொருளில் உள்ளிடப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கூ)	முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவால் பயன்படுத்தப்படுகின்ற, பல்லேகலையில் உள்ள தலைமை அலுவலகத்தின் காணியும், 0.1000 ஹெக்டேயர் அளவிலான மாத்தளை மாவட்ட அலுவலகத்தின் 0.1292 ஹெக்டேர் காணியும், போகம்பரை மாவட்ட அலுவலகத்தின் 01 ஏக்கர் 01 ரூட் 23.8 பேர்ச்சஸ் காணியும், தெய்யன்னெவெலவில் உள்ள 0.1000 ஹெக்டேர் நிலமும், மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் .	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(கெ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 (அ) பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் உருப்படி மற்றும் அதனுடன் தொடர்புடைய எதிர்கால நன்மைகள் அல்லது சேவைத் திறன் அந்த நிறுவனத்திற்குப் பாயும் போக்கொன்ற இருக்கும் போது, அது ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றாலும், 15 வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் 40 கோட்டக் கல்வி அலுவலகங்களின் காணி மற்றும் கட்டிட ங்களின் பெறுமதி 1461 மாகாண சபைப் பாடசாலைகளின் காணி கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் கல்வித் திணைக்களத்திக்குச் சொந்தமான 02 உத்தியோகபூர்வ விடுதிகளின் பெறுமதி ஆகியவை மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை.	தொடர்புபட்ட மதிப்பீட்டு செயற்பாடு மற்றும் கணக்கீடு மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.	திணைக்களத்திற்கு சொந்தமான ஆதனங்கள் மற்றும் சொத்துக்களை அடையாளம் காணப்பட்டு, மதிப்பிடப்பட்டு, சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.
(கே)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண கல்வித் திணைக்களத்தின் நிதியல்லாத சொத்துக்களின் கூற்றில், வாகனங்களின் பெறுமதி ரூபா 364,037,288 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட வாகன விவரங்களின் பிரகாரம், அப்பெறுமதி ரூபா. 319,030,000 ஆக இருந்ததால், ரூபா. 45,007,288 விலகல் காணப்பட்டது.	எதிர்காலத்தில் இந்த நிலைமையைச் சரிசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.	விலகல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(கை)	பொருளாதார ரீதியில் உயர்ந்த பெறுமதியுடைய பகுதியொன்றான ம.நுவரெலியாவின் மருத்துவமனை வீதியில் அமைந்துள்ள, மாகாண பொறியியல் திணைக்களத்தினால் கையேற்கப்பட்ட 0.0256 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட 55 ஆம் ஆம் இலக்க காணியும், 0.0203 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட 57 ஆம் இலக்க காணியும், அதன் மீது கட்டப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ குடியிருப்புகளும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படபடவில்லை.	அந்த சொத்துக்களை மதிப்பீடு செய்யுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கொ)	மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பயன்பாட்டில் இருந்த போதிலும், கையேற்க தவறிய 13 உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் மொத்தம் 0.4323 ஹெக்டேர் காணி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை .	உத்தியோகபூர்வ விடுதிகளைக் கையேற்கும் பணியில் திணைக்களம் ஈடுபட்டுள்ளது, மேலும் சட்ட நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் 04 உத்தியோபூர்வ விடுதிகள் உள்ளன.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கோ)	மாகாண சுகாதார அமைச்சின் மீளய்வண்டிற்கான நிதிக் கூற்றுகளில்	உரித்து கையளிக்கப்பபட்ட 06 வாகனங்களின் உரிமை மாற்றம்	வாகனங்களின் சரியான பெறுமதி

	இனங்காணப் பட்டிருந்த ரூபா 203,784,975 ஆன வாகனங்களின் பெறுமதியில், ஏனைய நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் 40 வாகனங்களுடன் தொடர்புடைய ரூபா 203,784,975 பெறுமரியும் சேர்க்கப்பட்டுள்ளதால் நிதிக் கூற்றுக்களில். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 231,130,975 கூடுதலாக காண்பிக்கப் பட்டுள்ளது,	நிறைவடைந்ததால், அந்த வாகனங்களின் பெறுமதி தரவுகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்களின் உரிமை மாற்றம் நடந்து வருகிறது,	கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(கௌ)	மாகாண சுகாதார அமைச்சினால் பராமரிக்கப்படும் காணி 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	காணியின் உரிமை கையேற்கப்பட்டவுடன், அதை சொத்துக்களில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	காணிகளின் உரித்தை கையேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ச)	கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பகத்தால் கையேற்ப்பட்ட பிராந்திய மருத்துவமனையின் 29 ஏக்கர் 28 ரூட் 02 பேர்ச் காணிகளின் பெறுமதியும், 88 பிராந்திய மருத்துவமனைகளின் கையேற்கப்படாத காணிகளும் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு உடனடியாகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	காணி ˙களின் உரித்தைப் பெறுவதற்கும், அவற்றை மதிப்பிடுவதற்கும், அவற்றைக் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
..(சா)	கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவகங்களுடன் இணைக்கப்பட்ட 216 மருத்துவமனைகளுடன் தொடர்புடைய கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களிலிருந்து தேவையான அடிப்படை தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்பதை தயவுசெய்து குறிப்பிட விரும்புகிறேன்.	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(சி)	மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் மற்றும் அதன் உப நிறுவனங்கள் அமைந்துள்ள 19 ஏக்கர் 02 ரூட் 26.5 பேர்ச் அளவுள்ள 04 காணிகள் மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு முறையாக கையளிக்கப்பட்டிருந்தாலும், அந்தக் காணிகளை மதிப்பீடு செய்து .கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக காணியை மதிப்பீடு செய்வதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.	காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(சீ)	மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் உடமை கொள்ளப்பட்ட 1.758 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட 07 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு	மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்குகளில் தற்போது 06 காணிகள் சேர்க்கப்பட்டுள்ளன,	. சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை

	செய்யப்பட்டிருக்கவில்லை.	மீதமுள்ள காணிகள் தொடர்பான சிக்கலான நிலைமை குறித்து அறிக்கை அளிக்க மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குறிப்பிடுகின்றேன்.	எடுத்தல் வேண்டும்.
(சு)	மாகாண புடவைத் திணைக்களத்தின் கீழ் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள 163 காணித் துண்டுகளில், 129 காணித் துண்டுகளின் சட்டப்பூர்வ உரிமை திணைக்களத்திற்கு மாற்றப்படவில்லை மற்றும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கையேற்கும் செயல்முறை நடந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	காணிகளின் உரிமையை கையேற்று பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(சூ)	மாகாண புடவைத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் கட்டிடங்களின் எண்ணிக்கை 175 ஆக இருந்ததுடன் அவற்றில் 43 கட்டிடங்கள் ரூபா. 178,900,600 இற்கு கையேற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருநத போதும் மீதமுள்ள 132 கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	கையேற்கப்படாத காணிகளின் உரிமை கையேற்ற பின்னர் மதிப்பீ: செய்த கணக்கீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	காணிகளின் உரித்தை கையேற்று பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(செ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு , மாகாண விவசாயத் திணைக்களத்தினால் கையேற்கப்பட்ட மொத்த காணி 10.9725 ஹெக்டேயர் ஆகும், மேலும் மாகாண பணிப்பாளர் அலுவலகம், 2 பிரதி பணிப்பாளர் அலுவலகங்கள், 3 உதவி பணிப்பாளர அலுவலகங்கள், 3 மாவட்ட பயிற்சி நிலையங்கள், இழைய வளர்ப்பு ஆய்வுகூடம், 9 உத்தியோகபூர்வ குடியிருப்புகள் மற்றும் கட்டிடம் ஒன்று உள்ளிட்ட 20 கட்டிடங்களின் பெறுமதிப் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி கிடைத்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படு என்பதாக தெரிவித்துக் கொள்கிறேன்.	சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(சே)	மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மாகாண பணிப்பாளர் அலுவலகம், 02 பிரதிப் பணிப்பாளர் அலுவலகங்கள், 02 கால்நடை மருத்துவமனைகள், 15 கால்நடை மருத்துவ அலுவலகங்கள் மற்றும் 04 கால்நடை மருத்துவ அலுவலகங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்களை அவற்றின் உரிமையைக் கையேற்று அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை.	காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் உரித்தினை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக தெரிவித்துக் கொள்கிறேன்.	உரித்தை கையேற்று பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(சை)	மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்திற்க்குச் சொந்தமான ,	அந்த சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத்	சொத்துக்களை மதிப்பீடு செய்து

இலக்கம். 230/3 எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க மாவத்தை கண்டியில் அமைந்துள்ள 0.0991 ஹெக்டேயர் காணியம், அந்த காணியில் உள்ள கட்டிடங்களும் மீளய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திததி யில் உள்ளவாறு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களாக மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.	கணக்கீடு அெசய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தனது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு

அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்பத்தப்பட்டது.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.5.1 தலைப்பு 540 – மத்திய மாகாண ஆளுனர் செயலகம்

	கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அமைச்சின் செயலாளரின் 2009 மார்ச் 05, திகதிய 10/2007 (1) ஆம் இலக்க வீட்டு வசதிகளை வழங்குதல், சுற்றறிக்கை, 2023 செப்டம்பர் 18 ஆந் திகதிய CPC/LC/LD/09/32/85 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மத்திய அரசின் அமைச்சருக்கு இணையான மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான உரித்தின் பிரகாபரம் ஒரு உத்தியோகபூர்வ வீட்டிற்கு உரிமை பெறுவது தொடர்பான ஆளுநருக்கு கண்டி, ரஜ வீதியில் உள்ள அரண்மனை சதுக்கம் என்ற முகவரியில் அனைத்து வசதிகளுடன் கூடிய உத்தியோகபூர்வ வீடு வழங்கப்பட்டுள்ளது. ஆளுனர் செயலக அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த இதுவரை சுற்றுலா பங்களாவாகப் பயன்படுத்தப்பட்டு வந்த கல்பாலம சுற்றுலா பங்களா, அவ்வப்போது நியமிக்கப்பட்ட ஆளுநர்களால் மேலதிக உத்தியோகபூர்வ வீடாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் மற்றும் 2024 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு ரூபா 491,503 தொகை மின்சார பட்டியல், தொலைபேசி பட்டியல், தொலைக்காட்சி இணைப்புச்	இதன் பின்னர் விசேட விருந்தினர்கள் கல்பாலம பங்களாவிற்கு வருகை தந்த நாட்களில் உண்மையில் பணிபுரிந்த காலத்திற்கு மட்டுமே இந்த உத்தியோகத்தருக்கு மேலதிக் நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	செலவினம் மற்றும் பொருளிருப்பு உருப்படிகள் பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் சுற்றுலா விடுதியின் விடுதிப் பராமரிப்பாளருக்கு சம்பளம் மற்றும் மேலதிக நேர படிகளாக ரூபா. 495,480 தொகையும் மீளாயவாண்டின் ஒக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா .421,100 வழங்கப்பட்டிருந்தது.		
.(ஆ)	2018 ஒக்டோபர் 12 ஆந் திதிய பொதுச் செலவின முகாமைத்தவ PS/CSA/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் படி மாகாண ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட 02 உத்தியோகப்பூர்வ வாகனங்களுக்கு மேலதிகமாக, சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் செய்யப்படாத பாதுகாப்பு வாகனத்திற்கு ஆளுநர் செயலகம் எரிபொருளை வழங்கி எரிபொருள் செலவுகளை சேமிக்க கூடியதாக இருக்கையில் மாதமொன்றுக்கு 495 லீற்றர் வீதம் எரிபொருள் 2023 ஆம் ஆண்டில் ரூபா 2,057,220 தொகையும் 2024 ஜனவரி முதல் அக்டோபர் வரை ரூபா 1,645,310 என ரூபா 3,702,530 எரிபொருள் படியொன்று மத்திய மாகாண ஆளுநருக்கு உரித்தான எரிபொருள் கொடுப்பனவிற்குன் மேலதிமாக அவரது சம்பளத்துடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையில் உள்ள அறிவுறுத்தல் களின் படி, மத்திய மாகாணத்தின் முன்னாள் கௌரவ ஆளுநருக்கு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான பாதுகாப்பு வாகனத்திற்கான எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 தலைப்பு 542 - மத்திய மாகாண பிரதான செயலாளர் அலுவலகம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபை தொகுதியின் சூரிய சக்தி மின் உற்பத்தி முறையொன்றை பொருத்தி குறித்த கம்பனியால் ஒப்பந்தத்தின் படி முறைமையைப் பராமரிக்க நிறுவனம் தவறியதாலும், ஒப்பந்தத்தை மீறியதாலும், எதிர்பார்க்கப்பட்ட மின்சார உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கையைக் குறைந்ததன் பேரில் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாததாலும், 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 6,292,843 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் மேலும், அந்தத் திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை ஏற்பட்ட இழப்பைக் கணக்கிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	தொடர்புடைய இழப்பை அறவிடுவது தொடர்பான எதிர்காலத்தில் பெற்றுக கொள்ளப்படும் சட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுசெய்து அறிய தருகின்றேன்.	ஏற்பட்ட இழப்புகளை அறவிடுவதற்கும் சொத்துக்களை பழுதுபார்த்து பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.3 தலைப்பு 542 - மத்திய மாகாண பிரதான செயலாளர் அலுவலகம் (நிதி)

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப் பிரமாணம் 128(2)(உ) இன் படி, 2024 திசெம்பர் 31 ஆந் திகதி 04 வருமான விடயங்களில் ரூபா. 211,380,607 நிலுவைத் தொகை அறவிடப்படா திருந்ததுடன் அரசாங்க காணிகள் சட்டத்தின் கீழ் ரூபா 36,372,513 பரிமாற்றக் கட்டணம் மற்றும் வாடகை (வருமானம் தலைப்பு 2002-01-05) நிலுவைத் தொகை 05 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டன.	நிலுவையில் உள்ள வரிகளை அறவிடுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	நிலுவை வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.4 தலைப்பு 546 - மத்திய மாகாண வருமானத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	1990 இன் 17 ஆம் இலக்க நிதி சாசனத்தின் 104(1) (அ) மற்றும் சாசனத்தின் 104 திருத்தத்தின் 1992 இன் 04 பிரிவின் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற ஊக்குவிப்பு படிகள் தொடர்பாக கணக்காய்வு திகதியான 2024 திசெம்பர் 13 ஆம் திகதி வரையிலும் நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு அந்நியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் ஊக்குவிப்புப்படி நிதிய கணக்கு தாபிக்கப்பட்டு கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக என அறியத் தருகிறேன்.	சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
.(ஆ)	2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய மத்திய மாகாண கணக்குகள் செயற்குழு கட்டளையின் பிரகாரம் நிலுவை புரள்வு வரி மீதியான ரூபா 17,279,654 தொகையை விரைவில் அறவிட்டு அறிக்கை ஒன்றை கணக்கு செயற்குழுவிற்கும் கணக்காய்வுக்கும் சமர்ப்பிக்குமாறு மாகாண வருமானத் திணைக்களத்துக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதும் அத்திகதி முதல் 08 ஆண்டுகளுக்கு அனண்மித்த காலம் கடந்திருந்த போதும் 1990 இன் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி சாசனம் மற்றும் 1992 இல் 01 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் திருத்திய நிதி சாசனத்தின் பிரகாரம் 2024 இல் நிலுவை புரள்வு வரி மீதி அறுவிடப்படாத இருந்ததுடன் நிதி பிரமாணம் 128(2) ன் பிரகாரம் அரச வருமானத்தை சேகரித்தல் தொடர்பாக நடவடிக்கைகளை புரியும் கணக்கிட்டு உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தை	வியாபார வங்கரோத்து அடைந்தமையால், வியாபாரங்கள் மூடப்பட்டமை வியாபார உரிமையாளர்கள் வதிவை விட்டுச் சென்றமை சில வியாபார உரிமையாளர்கள் மரணித்திருந்தமை அல்லது சிறந்த சுகாதார நிலைமையில் இல்லாத பின்னணி மற்றும் ஏனைய எவ்வித வருமான வழிகளும் இல்லாமை போன்ற காரணங்களின் பேரில் 59 கோவைகளை பதிவழிக்கும் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அறவிடும் செயற்பாட்டில் காணப்படுகின்ற கோவைகளுக்காக வெவ்வேறு வழிகளில் தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டு உரிய நபர்களிடம் கலந்துரையாடலுக்காக அழைக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	மாகாண கணக்கு குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தாமதம் இன்றி சேகரிப்பது தொடர்பில் விசேட ஏற்பாடுகள் ஈடுபடுத்த வேண்டிய 59 கோவைகளுக்குரிய ரூபா 7,469,542 ஆன நிலுவை புரள்வு வருமானத்தில் பதிவழிப்பதற்காக மாகாண வருமான ஆணையாளரின் பரிந்துரை இன்றி பிரதான செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது		

1.5.5 மாகாண மத்திய மாகாண பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	2016 முதல் 2019 வரையான ஆண்டுகளுக்குரிய ஒதுக்கப்பட்ட ரூபா 734,803 ஆன கணக்காய்வு கட்டணங்கள் 06 - 08 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் அவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட எடுக்கவில்லை.	நிலுவை மீதிகள் தொடர்பாக விசாரித்து எதிர்காலத்தில் தீர்மானம் ஒன்று எடுப்பதாக அறியத் தருகிறேன்	அனைத்து நிலுவை கணக்காய்வுக் கட்டணங்களையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
.(ஆ)	கண்டி சுற்றுலா தகவல் நிலையத்திற்காக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 17 மாதங்களுக்காக கண்டி மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகை ரூபா 1,697,025 தொகையை செலுத்த வேண்டிய செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 கணக்ககளைத் தயாரிக்கும் சீராக்கம் செய்வதாக அறிய தருகிறேன்.	அனைத்து செலுத்த வாடகை கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
.(இ)	கிரீன் பார்க் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை வாடகை ரூபா 3,167,023 தொகையை அறவிடுவதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழக்கு மற்றும் சேவையில் இருந்து நீக்கியமை தொடர்பாக சுத்திகரிப்பு தொழிலாளர் ஒருவரால் தொழில் நியாய சபையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டுகளின் கணக்குகளைத் தயாரிக்கும் போது பதிவு செய்வதாக அறியத் தருகிறேன்.	நிதிக் கூற்றுகளில் அனைத்து விடயங்களையும் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
.(ஈ)	பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் பயன்படுத்தப் படுகின்ற 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 24,280,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 07 வாகனங்களின் உரிக்கை கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	06 வாகனங்கள் கையேற்கப்பட வில்லை என்பதாகவும் 01 வாகனம் மாத்திரம் கையேற்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்கள் கையேற்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு

			நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.6 தலைப்பு 550- மத்திய மாகாண பிரதான அமைச்சு

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	போலி சான்றிதழ்களை சமர்ப்பித்ததால் பாடசாலை உதவியாளர்கள் மற்றும் பாதுகாவலர்களாக பணியாற்றிய 19 ஊழியர்களின் சேவைகள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இருப்பினும், 2022 டிசம்பர் 14 ஆம் திகதியுடைய 2310/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளின் பிரிவு 59 இன் படி, தவறான தகவல்கள் அல்லது தவறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்ததால், நியமனத்தை இரத்து செய்ய வேண்டும் என்பதுடன் அரசாங்கத்தால் அல்லது மாகாண சபையால் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக அவர்களுக்கு செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளையும் மீளப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இந்த ஊழியர்கள் தொடர்பாக இதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	2023.01.01 ஆம் திகதிக்கு முன்னர் நியமனங்கள் நிறுத்தப்பட்ட 17 ஊழியர்களின் சம்பளம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட சேவைகளுக்கே செலுத்தப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக அரசாங்கத்திற்கு எந்த இழப்பு அல்லது சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், 17 மற்றும் 18 ஆம் இலக்கங்களின் கீழ் உள்ள இரண்டு ஊழியர்களின் நியமனங்கள் 2023.01.01 ஆம் திதிக்குப் பிறகு நிறுத்தப்பட்டதால், அவர்களால் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தை மீட்டெடுப்பது தொடர்பான தகவலை மாகாண கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் உங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.	போலிச் சான்றிதழ்களின் அடிப்படையில் பெறப்பட்ட நியமனங்களும் சட்டவிரோதமானவை என்பதால், சட்டவிரோதமாகச் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் திரும்பப் பெறப்பட வேண்டும்.
.(ஆ)	பிரதான மற்றும் கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்வித் திணைக்கள ஊளியர்கள், அதிபர் சேவை மற்றும் கல்வி நிர்வாக சேவையின் உத்தியோக்கத்தள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளிற்குறிய விசாரணைகள் 01 முதல் 05 ஆண்டுகள் வரையிலான காலத்தை கடந்திருந்த போதிலும் விசாரணை நிறைவுசெய்யப்படாத 07 சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன.	ஒவ்வொரு கட்டத்திலும் விசாரணை நடந்து வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.	விசாரணைகள் விரைவாக நிறைவுசெய்யப்பட வேண்டும்
.(இ)	நிதிப் பிரமாணம் 104 (4) இன் படி, விசாரணைக்குப் பிறகு இழப்பு/சேதம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஒரு முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற போதிலும், 05 சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 104 (4) ன் கீழ் விசாரணைகளை நடாத்த விசாரணை	விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.	நிதிப் பிரமாண கட்டளைகள் பிரகாரம் செயற்பட வேண்டும்

	குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், மேற்கூறிய விசாரணைகள் 01 முதல் 06 ஆண்டுகள் வரை தாமதமாகியிருந்தன.		
.(ஈ)	பிரதான மற்றும் கல்வி அமைச்சிற்குச் சொந்தமான ரூபா. 14,478,826 மதிப்புள்ள 02 வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தாலும், அந்த சொத்துக்களை முறையாக கைமாற்றுவதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளபபட்டிருக்க வில்லை.	இந்த விடயம்தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	சொத்துக்களை முறையாக கைமாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்
(உ)	கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மத்திய மாகாணத்தில் 420 கடமை நிறைவேற்று அதிபர்கள் பணியாற்றும் அதேவேளையில் 454 அதிபர் தர அதிபர்கள் பாடசாலைகளில் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றமை அவதானிக்கபட்டது. அதன்படி, மாகாணத்தின் அனைத்து வலயங்களிலும் அதிபர் தர அதிபர்களை முறையாக நியமித்து, இந்தப் பதவிகளில் சமநிலையை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஒரு பாடசாலையின் அதிபர் வெற்றிடமாக இருந்தால், அந்தப் பதவியில் பணியாற்ற இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தளை நியமிப்பது நிறுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை அதிபர் சேவையின் தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தள் நியமிக்கப்படுகிறார்கள். தற்போது கடமை நிறைவேற்று அதிபர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையின் விதிமுறைப்படி இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.	அதிபர் தர அதிபர்களை முறையாக பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	மத்திய மாகாண ஊழியர்களில் 504 அதிபர் வெற்றிடங்களும், 137 பிரதி அதிபர் வெற்றிடங்களும், 10 உபரிகளும், 11 உதவி அதிபர் வெற்றிடங்களும், 444 உபரிகளும் காணப்பட்டன. அவற்றில், கண்டி வலயத்தில் 09 பிரதி அதிபர்களும் 125 உதவி அதிபர்களும் உபரியாகப் பணியாற்றுவது அவதானிக்கப்பட்டது. கலேவெல மற்றும் வில்கமுவ வலயங்களில் மட்டும் உதவி அதிபர் வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 07 மற்றும் 04 ஆகும். வில்கமுவ வலயத்தில் 40 அதிபர் தர வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், புதிய அதிபர் தர அதிபர்களை நியமிக்கும்போது இந்த வலயத்திற்கு எந்த அதிபரையும் நியமிக்க உத்தியோக்கத்தள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வருடாந்த இடமாற்றங்கள் மூலம் தரப்படுத்தப்பட்ட அதிபர்களை சமநிலைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். .	அனுமதிக்கப்பட்ட பணியாளர்களைப் பராமரிக்கவும், தொடர்புடைய பதவிகளுக்கு தகுதியானவர்களை முறையாக பணியமர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.7 தலைப்பு 551- மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதணைக் குழுக்கள் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், உள்ளாட்சித் திணைக்களம் 2024 ஆகஸ்ட் 31 இல் பரிசோதணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு 03 மாதங்கள் முதல் 02 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியை மீறிய போதிலும், குழு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத 33 சந்தர்ப்பங்கள் இருந்தன.	தொடர்புடைய அறிக்கைகளை உடனடியாகப் பெறுவதற்கு அவர்களுக்கு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மற்றும் ஒரு இலக்கு காலஎல்ரை வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அதற்கேற்ப தொடர்புடைய பின்தொடர்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.	நிதிப் பிரமாணங்களின் படி, தாமதமின்றி பரிசோதனைகள் முடிக்கப்பட வேண்டும்.
.(ஆ)	2014 மே 30 ஆந் திகதிய 14.2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06, 07 மற்றும் 08 பந்தியின் படி கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களில் நடந்த முறைகேடுகள் குறித்து ஆரம்ப விசாரணைகளை நடத்துவதற்கு தொடர்புடைய குழுக்கள் நியமிக்கப்பட்டு 1-7 ஆண்டுகள் காலம் கழிந்திருந்தாலும், 2 சம்பவங்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	முதற்கட்ட விசாரணை அறிக்கைகளை 2025 மே 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
.(ஆ)	மத்திய மாகாணத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களின் மிகை அறவீட்டுக் கட்டணம் தொடர்பாக 2013 மற்றும் 2022 காலப்பகுதிக்கு இடையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட 14 மிகை அறவீட்டுக் கட்டணம் சான்றிதழ்களின் படி ரூபா. 9,523,301 மிகைக் கட்டணங்களை அறவிடுவது குறித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை.	மேலும், 07 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து ரூபா . 9,288,299.78 தொகை வசூலிக்கப்பட உள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் .

1.5.8 தலைப்பு 552 - மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் 23 பதவிகளில் 7,781 வெற்றிடங்களும், 13 பதவிகளில் 3,509 மேலதிகப் ஊளியர்கள் இருந்தபோதிலும், வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது வெற்றிடங்களாக உள்ள பதவிகளுக்கு மேலதிகமாகக் காணப்படும் ஊளியர்களை நியமிக்கவோ நிர்வாகம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.	ஊளியர்கள் தொடர்பான மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பொழுது பதவிகளிற்கான வெற்றிடங்கள் மற்றும் உபரிகள் பற்றிய தகவல் பிரதான மற்றும் கல்வி அமைச்சிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை பூரணப்படுத்தவும் மேலதிக ஊளியர்களுக்கு வெற்றிடங்களாக உள்ள இடங்களுக்கு நியமனங்களை வழங்கவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிதிநிலை அறிக்கைகளுடன் வழங்கப்பட்ட இழப்புகள் மற்றும் தள்ளுபடிகள் அறிக்கையின்படி (குறிப்பு - i), மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தம் ரூபா. 23,966,124 மதிப்புள்ள 104 சம்பவங்களுடன் தொடர்புபட்டதான தொகையை வசூலிக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ எவ்வித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை.	இந்த சம்பவங்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு, மேலதிக கட்டணம் வசூலிக்க வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, பிரதான மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் மீண்டும் விசாரணைகளை நடத்த விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளதுடன்இந்த விசாரணைகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.	பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள விரைவாக செயற்பட வேண்டும்.
(இ)	முந்தைய ஆண்டு மற்றும் மதிப்பாய்வு செய்யப்படும் ஆண்டில் 10 வலயக் கல்வி அலுவலகங்களால் பெறப்பட்ட 751 புகார்கள் மற்றும் மனுக்கள் தொடர்பாக, விசாரணை குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்தப் புகார்களை விசாரிக்கக் கிடைக்கும் மனிதவளம் போதுமானதாக இல்லாததாலும், பரபரப்பான கால அட்டவணை காரணமாக ஒரே நேரத்தில் மூன்று உத்தியோக்கத்தள் இருப்பதில் உள்ள சிரமத்தாலும் இந்த விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	புகார்கள் மற்றும் மனுக்கள் தொடர்பான விசாரணைகள் விரைவாக நிறைவுசெய்யப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி இல் உள்ளவாறு, இடமாற்றம் செய்யப்பட்ட, இறந்த, ஓய்வு பெற்ற, இடைநீக்கம் செய்யப்பட்ட, பிற மற்றும் சேவையிலிருந்து இடைவிலகிய ஊளியர்களின் கடன் நிலுவைத் தொகையாக மொத்தம் ரூபா. 78,769,816 காணப்பட்டதுடன், அதில் ரூபா. 57,961,525 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்தது. .	மாகாண அலுவலகம் மற்றும் 15 வலயக் கல்வி அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட பரிந்துரைகள் மற்றும் அமைச்சின் ஒப்புதலின் அடிப்படையில், 261 உத்தியோக்கத்தளின் ரூபா. 8,006,847.75 மதிப்புள்ள கடன் நிலுவைகளை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும், இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோக்கத்தளின் கடன் நிலுவைகளை தீர்ப்பதில் போதுமான உறுதிப்படுத்தல்கள் இல்லாததால்,	முற்பணக் கொடுப்பனவு கணக்குகளில் காணப்படும் வரவேண்டிய கடன் தொகைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

		இந்த கடன் நிலுவைகளை தீர்ப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளன.	
(உ)	மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திததி இல் உள்ளவாறு, இடமாற்றம் பெற்று வருகைதந்த உத்தியோக்கத்தளின் தீர்ககப்பட வேண்டிய மொத்த கடன் நிலுவைத் தொகை ரூபா. 12,693,632 ஆகும். இதில் ரூபா. 10,734,533 ரூபாய் 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.	இந்தக் கடன் நிலுவைகளெல்லாம் விசாரணை சபைகளால் பரிசோதிக்கப்பட்ட கடன் நிலுவைகளாகும் என்பதுடன் போதுமான உறுதிப்படுத்தல் இல்லாததால் சரிசெய்ய பரிந்துரைக்கப்படாத கடன் தொகைகளாகும்.	முற்பணக் கொடுப்பனவு கணக்குகளில் காணப்படும் செலுத்த வேண்டிய கடன் தொகைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	2023 டிசம்பர் 29 திகதியுடைய 54/2023 ம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 14:1:8 இன் படி, பாடசாலை அபிவிருத்தி சங்கக் கணக்கிலிருந்து வவுச்சர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அதை அதிபர் அங்கீகரிக்க வேண்டும் என்பதுடன் பிரதி அதிபர்/உதவி அதிபர் வவுச்சர்களை சான்றளிக்க வேண்டும் என்றாலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மத்/தெல்/ ரம்புக்வெல்ல கனிஷ்ட வித்தியாலயம், மத்/தேனு/ஹெரமிட்டிகல ஸ்ரீ தீரானந்த மகா வித்தியாலயம், மத்/கம்/ஜினராஜ ஆணகள் வித்தியாலயம் என்பவற்றில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா. 964,557 மதிப்புள்ள 32 வவுச்சர்களின் கொடுப்பனவுகள் சான்றுறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.	வவுச்சர்களின் அனுமதி மற்றும் சான்றளித்தலில் உள்ள குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(எ)	2023 திசெம்பர் 29 திகதியுடைய 54/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 14:1:3 மற்றும் பிரிவு 14:1:3 இன் படி, தெனு/ஹெரமிட்டிகல ஸ்ரீ தீரானந்த மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கக் கணக்கிலிருந்து 1,138,530 ரூபாய் கட்டணம் செலுத்தப்பட்ட 13 சந்தர்ப்பங்களில் பற்றுச்சீட்டுகள் அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்காமல் அவை மேற்கொளப்பட்டுள்ளதுடன், 07 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்த ரூபா. 477,000 மதிப்புள்ள பொருட்களுக்கான கட்டணங்களை நிரூபிக்க தொடர்புடைய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை	நிதிப் பிரமாணப் 104(03) இன் படி ஒரு விசாரணையை நடாத்த ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கையைப் பெற்ற பின்னர் எடுக்கப்படும் அடுத்தஅ கட்ட நடவடிக்கை பற்றி உங்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.	சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் செயற்பட வேண்டும்.

(ஏ)	பேராதனை மத்திய கல்லூரியின் பதின்மூன்று ஆண்டு தொடர் கல்வித் திட்டத்தின் ஒரு பாடமான கிரபிக் டிசைன் (சிங்கள மொழி) பாடத்திற்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3 1(அ) ஆசிரியராக நியமிக்கப்பட்ட ஒரு ஆசிரியர், 2018 ஜுலை 23 ஆம் தேதி பொறுப்பேற்றார். 2021 முதல் மாணவர்கள் இந்தப் பாடத்திற்கு விண்ணப்பிக்காததால், இந்த ஆசிரியர் ரூபா 2021 முதல் 2024 வரை எந்த சேவையும் செய்யாமல் ரூபா. 1,547,142 இனை சம்பளமாக பெற்றுக்கொண்டிருந்தார்.	இது தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.	ஆசிரியர்களை தங்கள் பாடத்துடன் தொடர்பான கற்பித்தலில் ஈடுபடுத்த வேண்டும்.
(ஒ)	ஹங்குரன்கெத வலயக் கல்வி அலுவலகத்தில் சம்பளம் தயாரிப்பதில் ஏற்பட்ட சம்பள முறைகேடு தொடர்பாக ரூபா. 767,213 தொகை இன்னும் வசூலிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அந்தத் தொகையை வசூலிக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இந்த நிதி முறைகேடு தொடர்பான விசாரணைக் குழு அறிக்கையின் பரிந்துரைகளை செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அறவிட வேண்டிய தொகையான ரூபா 767,215.75 செலுத்த வேண்டிய திரு. டி.எம்.ஏ. தசநாயக்க, 2024.08.15 ஆந் திகதி இறந்து விட்டதால், மேற்கூறிய கட்டணத்தை வசூலிப்பதற்கான பரிந்துரைகளுக்காக அவரது விதவை ஓய்வூதியம் தொடர்பான தகவல்கள், பிரதான அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன.	நிலுவைத் தொகையை வசூலிக்க தாபன விதிக் கோவையின் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஓ)	மாகாணக் கல்வித் திணைக்களம் தொடர்பாக அடையாளம் காணப்பட்ட இழப்புகள் தொடர்பாக நடத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 104(4) விசாரணைகளின் பரிந்துரைகளின்படி மற்றும் நிதி பிரமாணம் 119 (மாகாண நிதி விதிகள் 68) இன் படி, நிதி ஒழுங்குமுறை 119 (மாகாண நிதி விதிகள் 68) இன் பிரகாரம் மிகை அறவீடுகள் மேற்கொள்ளப்பட்ட 12 இழப்புகள் தொடர்பான ரூபா. 2,148,225 இணை, மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேலும் அறவிடப்பட வேண்டிய மேலதிக இழப்புத் தொகையான ரூபா. 2,148,225 இல் ரூபா. 149,862.80 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு வசூலிக்கப்பட வேண்டிய எஞ்சிய தொகையை வசூலிக்க் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	அதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஔ)	மத்திய மாகாணத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 42,970 மாணவர்களில் 5,469 மாணவர்கள் அல்லது 12.75 சதவீதம் பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். இது நாட்டின் ஒட்டுமொத்த சதவீதமான 16.05 சதவீதத்தை விடக் குறைவானதாகும். நாட்டின் 09 மாகாணங்களுடன் ஒப்பிடும்போது, மத்திய மாகாணம் 09வது இடத்தில் உள்ளது. நாட்டின் 25 மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது, மாத்தளை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்கள் முறையே 17வது, 21வது	தீவின் மாகாணங்களுக்கிடையே மொழி, வருமான நிலை, பாடசாலை இருப்பிடம் மற்றும் வசதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மிகப்பெரிய வேறுபாட்டைக் காட்டுகின்ற மத்திய மாகாணத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் பற்றாக்குறை, ஆரம்பப் பிரிவு கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையை கடுமையாக பாதித்துள்ளது. அதேவேளை மத்திய மாகாணத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களின் பெரும்	ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையவும், செயல்திறன் நிலைகளை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	மற்றும் 22வது இடங்களில் உள்ளன. வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களின் சதவீதத்தை நாட்டின் 100 கல்வி வலயங்களுடன் ஒப்பிடும்போது, , மத்திய மாகாணத்தில் உள்ள 15 வலயங்களில் 12 வலயங்கள் தரவரிசையில 50வது இடத்திற்குக் கீழே காணப்படுகின்றன.. இதில் நுவரெலியா மாவட்டம் 96வது இடத்தைப் பிடித்துள்ளது. அதன்படி, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் முழு தீவின் பெறுபேறுகளுடன் ஒப்பிடும்போது மத்திய மாகாணம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	பற்றாக்குறையும் காணப்படுகின்றது. இந்த சூழ்நிலையில், ஆரம்பக்கல்வி கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு தேவையான வழிகாட்டலை வழங்க தேவையான மனித வளங்கள் இல்லாமை ஒரு பிரச்சனையாகும்.	
(க்)	பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட செயலாற்றல் அறிக்கையின ் பிரனாரம் 2024 மே மாதம் நடைபெற்ற 2023 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 41,737 மாணவர்கள் தோற்றியதில் 31,380 மாணவர்கள் அல்லது 75.19 சதவீதம் பேர் க.பொ.த. உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றனர். கணிதம் உட்பட 03 சிறப்புச் சித்திகளை பெற்று உயர்தரம் கற்கத் தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 27,372 அல்லது 65.58 சதவீதம் ஆகும். மேலும் 766 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் சித்தியடையவில்லை. உயர்தரம் கற்கத் தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதத்தின் பிரகாரம் தீவின் 09 மாகாணங்களில் மத்திய மாகாணம் 05 வது இடத்தைப் பிடித்தது. நாட்டில் உயர்தரத்துக்கு தகுதி பெற்ற மாணவர்களின் ஒட்டுமொத்த சதவீதம் 75.72 சதவீதமாக இருந்த அதே நேரத்தில் மத்திய மாகாணத்தில் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் அந்த சதவீதத்தை எட்டவில்லை. கணிதம் உட்பட 03 சிறப்பு சித்திகளுடன் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் சதவீதத்தை ஒப்பிடும்போது, கம்பளை, கலேவெல மற்றும் நுவரெலியா வலயங்களின் சதவீதம் 60 சதவீதத்திற்கும் குறைவாக காணப்பட்டதுடன் நாட்டின் 100 கல்வி வலயங்களுடன் ஒப்பிடும்போது, மத்திய மாகாணத்தில் உள்ள 15 வலயங்களில் 08 வலயங்கள் 50 வது இடத்திற்கு கீழே தரவரிசைப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றில், கம்பளை வலயம் 88 வது இடத்திற்கு பின்தங்கியுள்ளது.	ஒவ்வொரு ஆண்டும் கடந்த ஆண்டை விட பெறுபேறுகளை மேம்படுத்துவதே எங்கள் நோக்கமாகும். அதன்படி, பாடசாலைகளுக்கு மேலதிகமாக, வலயங்களில் உள்ள பிரச்சினைகளை நாங்கள் கண்டறிந்து, மாகாண மட்டத்தில் திட்டங்களை ஒழுங்கமைத்து, வரும் ஆண்டுகளில் வளர்ச்சிக்கான சிறப்பு ஏற்பாடுகளை செயல்படுத்தி வருகிறோம்.	ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையவும், செயல்திறன் நிலைகளை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(க)	பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட செயல்திறன் அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டுக்கான 2024 க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு மத்திய மாகாணத்திலிருந்து 30,366 மாணவர்கள் தோற்றியதுடன் அதில் 19,255 மாணவர்கள், அதாவது 63.41 சதவீதம் பேர், பல்கலைக்கழக சேர்க்கைக்கு தகுதி பெற்றிருந்ததுடன் இது நாட்டின் ஒட்டுமொத்த சதவீதமான 66.07 சதவீதத்தை விடக் குறைவானதாகும். அனைத்துப் பாடப் பிரிவுகளிலும் அனைத்துப் பாடங்களிலும் விசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 904 ஆகவும், அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத்தவறிய மாணவர்களின் எண்ணிக்கை 2,915 ஆகவும் காணப்பட்டது. பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் அமைப்புகள் தொழில்நுட்பம், உயிரியல், பௌதீகவியல், வணிகம் மற்றும் கலை ஆகிய பாடப் பிரிவுகளின் கீழ் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் சதவீதத்தைப் பொறுத்தவரை, மத்திய மாகாணம் தீவின் 09 மாகாணங்களில் முறையே 03, 05, 07, 08, 08 மற்றும் 08 இடங்களைப் பெற்றுள் அதே நேரத்தில் உயிரியல், பௌதீகவியல், வணிகம் மற்றும் கலை ஆகிய பாடப் பிரிவுகளின் முடிவுகளின் அடிப்படையில், தீவின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது மத்திய மாகாணம் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. மேலும், பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் சதவீதத்தைப் பொறுத்தவரை, மத்திய மாகாணத்தில் நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்கள் தீவின் 25 மாவட்டங்களில் முறையே 18, 20 மற்றும் 22 இடங்களைப் பெற்றுள்ளன.	மாகாணத்திற்கு தனித்துவமான பெறுபேறுகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் காரணிகளும் உள்ளன. சில பாடங்கள் மற்றும் மொழி மூலங்களில் ஆசிரியர்கள் இல்லாமை, பொருளாதார நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் பெற்றோரின் உந்துதல் மற்றும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமை ஆகியவை இதில் அடங்கும். இந்தக் காரணிகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, மத்திய மாகாணம் தரமான பெறுபேறுகளை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.	ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையவும், செயல்திறன் நிலைகளை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5.9 தலைப்பு 553 - மத்திய மாகாண காணித் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
			-
(அ)	வணிக நோக்கங்களுக்காக 2003 ஜூலை 23 ஆம் தேதி முதல் 30 ஆண்டுகளுக்கு கெடவல கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் சம்பந்தப்பட்ட குடியிருப்பாளருக்கு 20 பேர்ச்சர்ஸ் காணி குத்தகைக்கு விடப்பட்ட போதிலும், 2003 முதல் மீளாய்வு ஆண்டு வரை செலுத்த	காணி கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி சட்ட நடவடிக்கைக்காக காணி ஆணையாளரிடம் இந்த விடயத்தை பரிந்துரைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.	வருவாய் நிலுவைத் தொகையைப் பதிவு செய்து வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வேண்டிய மொத்த வரி மற்றும் தவணைத் தொகையான ரூபா. 5,000,320 வசூலிக்கப்படவில்லை. மேலும் அந்த வரித் தொகை வரி நிலுவைத் தொகையாக அடையாளம் காணப்பட்டு வரிப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை.		
(ஆ)	ராகலை கிராம அலுவலர் பிரிவில் வணிக நோக்கங்களுக்காக 47 பேர்ச்சஸ் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக 40 பேர்ச்சஸ் காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு, மதிப்பாய்வு செய்யப்படும் ஆண்டின் இறுதிக்குள் ரூபா 21,447,200 வரி வருவாய் வசூலிக்கப்பட வேண்டி இருந்தது.	நிலுவையில் உள்ள வரிகளை செலுத்தாததற்காக, 2025.06.23 ஆந் திகதி குத்தகைதாரருக்கு பிரதேச செயலாளர் இறுதி அறிவிப்பை அனுப்பியுள்ளார்.	வருமானத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
(இ)	மாகாண காணித் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் வரி நிலுவைத் தொகை வருவாய் பதிவுகளின்படி, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி இல் உள்ளவாறு, மத்திய மாகாணத்தில் உள்ள 31 பிரதேச செயலகப் பிரிவுகளைப் பொறுத்தவரை, தொடர்புடைய குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா. 122,693,096 வரி நிலுவைத் தொகை வருவாய் வசூலிக்கப்பட இருந்தது. இதில், 9 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா. 115,299,115 வரி நிலுவைத் தொகை வருமானம் அறவிடப்பட இருந்தது. இது மொத்த வரி நிலுவைத் தொகை வருவாயில் 94 சதவீதமாகும். 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வருவாய் கால பகுப்பாய்வின்படி, மொத்த வரி நிலுவைத் தொகை வருவாயில் 45 சதவீதம், அதாவது ரூபா. 54,967,929, தொகை 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்தது.	நிலுவை வரி மதிப்பீடுகள் திருத்தப்பட்டதன் காரணமாக, 30.06.2025 இல் உள்ளவாறு, ரூபா. 143,666,724.29 ஆக தொகை அதிகரித்துள்ளதுடன் அந்தத் தொகையில், 30.06.2025 இல் உள்ளவாறு ரூபா. 22,542,119.10 தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபா. 121,124,605.19 தொகை 10 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து வசூலிக்கப்பட உள்ளது.	நிலுவையாகவுள்ள வருமானத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
(ஈ)	நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் 2012 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலத்திற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் 0.253 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஒரு காணி சம்பந்தப்பட்ட குடியிருப்பாளருக்கு குடியிருப்பு நோக்கங்களுக்காக வழங்கப்	தற்போதைய நிலைமை குறித்து விசாரித்து 2025.05.16 ஆந் திகதி பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் எந்த பதிலும் கிடைக்கவில்லை.	வருமானத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	பட்டுள்ளது. 2012 முதல் மீளாய்வாண்டு வரை செலுத்த வேண்டிய வரி ரூபா. 900,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.		
(உ)	இலங்கை சென் ஜோன்ஸ் அம்ப்யூலன்ஸ் சேவைக்குச் சொந்தமான மாத்தளை பிராந்திய பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியிலிருந்து, 2009 முதல் மீளாய்வு ஆண்டு வரை வரி தவணைகளாக ரூபா. 1,280,000 மற்றும் வட்டி நிலுவைத் தொகையாக ரூபா. 960,000 என மொத்த நிலுவைத் தொகை ரூபா. 2,240,000 இனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் அந்த வரித் தொகை வரி நிலுவைத் தொகையாக அடையாளம் காணப்பட்டு நிலுவை வரிப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	வரி செலுத்துதல் குறித்து அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வரி செலுத்தத் தவறுவது கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், இறுதி அறிவிப்பை வழங்கிய பின்னர் காணி கட்டளைச் சட்ட விதிகளின்படி சட்ட நடவடிக்கைகளுக்காக காணி ஆணையாளரிடம் இந்த விடயத்தை பரிந்துரைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.	நிலுவை வருமானத் தொகையைப் பதிவு செய்து வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும

1.5.10 தலைப்பு 557 - மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை	கருத்துரை
.(அ)	வ/ப மத்திய மாகாண வாகன கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் தொடர்பாக மாகாண கணக்குக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட 15 தீர்ப்பாளர் கோப்புகளில், 2024 திசெம்பர் 31, ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாத 08 தீர்ப்பாளர் கோப்புகளின் பெறுமதி ரூபா 27,415,860 ஆக இருந்தது	07 தீர்ப்பாளர் பிரச்சினைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 08 கோப்புகளை பூர்த்தி செய்வதற்கான செயற்பாடுகள் நடந்து வருகின்றன.	எஞ்சியுள்ள தீர்ப்பாளர் பிரச்சினைகளை பூர்த்தி செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
.(ஆ)	மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில், சிக்கல் நிறைந்த/ ஆபத்தில் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட 09 கூட்டுறவுச் சங்கங்களின் 43,657 வாடிக்கையாளர்களுக்காக ஆண்டின் இறுதிக்குள் ரூபா. 1,468,597,306 வைப்புத் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாதிருந்ததுடன் இந்த வைப்புத் தொகைகளைத் தீர்வு செய்வது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஈடுபாடு மிகவும் பலவீனமான மட்டத்தில் இருந்தது.	வைப்புத்தொகை கொடுப்பனவு தொடர்பாக அதிக ஆபத்து நிலைமையில் உள்ள நிதி நெருக்கடியில் உள்ள சங்கங்களின் நட்டத்திற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து மிகை அறவீடு செய்வதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. அதுவரை, அந்த சங்கங்களால் வைப்புத்தொகை செலுத்துவதற்கான ஒரு கட்டணத் திட்டம் தயாரிக்கப்பட்டு, நீதிமன்ற அபராதங்களை வசூலிக்கும் வகையில் வைப்புத்	வைப்புத்தொகைய தீர்வு செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		தொகையாளர்களின் பணத்தை தவணைகளில் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	
.(இ)	நடப்பாண்டின் இறுதிவரை கூட்டுறவு சங்கங்கள் தொடர்பாக திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட 46(1) பரிசோதனைகளுக்குரிய கண்டி மாவட்டத்தின் 06 கூட்டுறவு சங்கங்களில் ரூபா 25,937,012 தொகையும் மாத்தளை மாவட்டத்தில் 07 சங்கங்களில் ரூபா 240,213723 தொகையும் நுவரெலியா மாவட்டத்தின் 05 சங்கங்களின் ரூபா 78,290,181 என மொத்தம் 18 சங்கங்களில் ரூபா 344,440,916 பெறுமதியான மிகை அறவீட்டு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதும் அந்நட்டத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	மூன்று மாவட்டங்களுக்குரிய 3 நீதிமன்றங்களில் வழக்கு நடைபெற்று வருவதுடன் ஏனைய சங்கங்களில் 46(1) பரிசோதனைக்குரிய நட்டங்களை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு வெவ்வேறு மட்டங்களில் நடைபெற்று வருவதாகவும் அறியத் தருகிறேன்	மிகை அறவீடு செய்யப்பட்ட பணத்தை அறவிடுவதற்குத் நடவடிக்கை எடுத்தால் வேண்டும்
.(ஈ)	2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தலிருந்து வழங்கப்பட்டிருந்த கடன்களில் 74 கூட்டுறவு சங்கங்களில் இருந்து ரூபா 73,591,580 கடன் மீதிகள் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 0 -03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 70 சங்கங்களில் இருந்து ரூபா 72,234,672 தொகையும் ஆண்டு 03-06 இடையே 04 சங்கங்களில் இருந்து ரூபா 881,423 தொகையும் 18 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 02 சங்கங்களில் இருந்து ரூபா 475,485 ஆன கடன் மீதியும் அறவிடப்படாமல் காணப்பட்டது.	கூட்டுறவு நிதியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த கடன்களில் 74 சங்கங்களில் இருந்து கடன் தொகை உரிய நேரத்தில் அறவிடடு 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபாய் 73,591,579.69 தொகை அறவிடுவதற்கு உள்ளதாக குறிப்பிட விரும்புகிறேன்.	கடன் தொகையை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
.(உ)	மாகாண கூட்டுறவு திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட 1692 சங்கங்களில் 1212 சங்கங்கள் செயலற்றதாக மாறி இருந்ததுடன் திணைக்களம் மீளாய்வாண்டில் 490 சங்கங்களை கணக்காயவு செய்வதற்குக்கு திட்டமிடப்பட்ட போதும் ஆண்டின் இறுதிவரையில் 36 சதவீதமான அதாவது 179 சங்கங்கள் மாத்திரம் கணக்கயா்வு மேற்கொண்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் கணக்காய்வை மேற்கொள்வதற்கு 129 சங்கங்கள் காணப்படுவதாக தயவுடன் குறிப்பிடுகிறேன்.	திட்டமிடப்பட்ட அனைத்து சங்கங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்
.(ஊ)	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்குரிய கண்டி மாவட்டத்தின் 229 கூட்டுறவு சங்கங்களில் இருந்து ரூபா 159,603,797 தொகையும் நுவரெலியா மாவட்டத்தின் 92 கூட்டுறவு சங்கங்களில் இருந்து ரூபா 48,442,481 தொகையும் மாத்தளை மாவட்டத்தில் 07 கூட்டுறவு சங்கங்களில் இருந்து ரூபா 54,443,311 தொகையும் என ரூபா 262,489,589 ஆன	மேலும் நிதி அறவீட்டின் முன்னேற்றம் குறித்து கலங்துரையாடப்பட்டு வருவதாகவும், பங்களிப்பை வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.	கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்கு பங்களிப்புகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பங்களிப்பொன்று அறவிடபபட்டிருக்க வில்லை

1.5.11 தலைப்பு 561 - மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மருந்து ஒழுங்குபடுத்தும் மற்றும் விநியோகத்தை நிர்வகிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்வஸ்தா மருந்து முகாமைத்துவ முறைமை பெறப்பட்ட செயல்பாட்டில் இருந்த போதிலும், பெற்றுக்கொண்ட தககவல் படி 16 மருத்துவமனைகளிலும் கண்டி பிராந்திய மருத்துவ விநியோகப் பிரிவிலும் ரூபா.788,471,201 பெறுமதியான காலாவதியான மருந்து இருப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டன, அவற்றிலிருந்து 10 மருத்து வமனைகளில் அடையாளம் காண முடியாத 332 காலாவதியான மருந்து வகைகள் அவதானிக்கப்பட்டன.	நிதிப் பிரமாணத்தின் 104(4) இன் பரிசோதனைக் குழுவிடம் அனுப்பி உடனடியாக நடவடிக்கை எடுப்பேன்.கீழ் இந்த விடயத்தை	மருந்து ஒழுங்குபடுத்தல் முறை மற்றும் விநியோகம் முகாமை செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள 03 மாவட்டங்களில் உள்ள 06 பிராந்திய மருத்துவமனைகள் மற்றும் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவில் ரூபா 14,557,718 பெறுமதியான 426 வகையான மருந்துகளின் 1,265,294 அலகுகள் காலாவதியாகி இருந்தன..	பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சுகாதார நிறுவனங்களில் காணப்படும் காலாவதியான மருந்துகள் தொடர்பான நி.பி. 104(3) அறிக்கைகள், அவற்றின் பெறுமதிக்கு ஏற்ப தொடர்புடைய நி.பி 104(4) பரிசோதனைக் குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதையும், உடனடியாக எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தயவுடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.	.நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 02 மாவட்டங்களில் உள்ள 02 பிராந்திய மருத்துவமனைகள் மற்றும் பிராந்திய மருத்துவ விநியோக அலகுகளில் ரூபா. 5,017,350 பெறுமதியான 66 வகையான மருந்துகளின் 144,034 தரமற்ற மருந்து இருப்புக்கள் இருந்தன.	தரத்தில் குறைபாடுள்ள மருந்துகள் குறித்து கோரப்பட்ட தொடர்புடைய தகவல்களை கொழும்பு தலைமை மருத்துவ வழங்கல் பிரிவு வழங்கி வருகிறது, மேலும் கொழும்பு தலைமை மருத்துவ வழங்கல் பிரிவால் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும்.	மருந்து ஒழுங்குபடுத்தல் முறை மற்றும் விநியோகம் முகாமை செய்யப்பட வேண்டும்.
.(ஈ)	2019 மே 09 ஆம் தேதி மத்திய மாகாண பிரதான செயலாளரினால் 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த கண்டி மாவட்ட சுகாதார சேவை	09 உத்தியோக்கத்தளிடமிருந்து அறவிட வேண்டிய தொகை முழுமையாக அறவிடப்பட்டுள்ளது. ஒரு அதிகாரியிடமிருந்து செலுத்த வேண்டிய தொகையை	சம்பந்தப்பட்ட உத்தியோக்கத்தர் ளிடமிருந்து அறவிட வேண்டிய

	பணிப்பாளர் அலுவலகத்தினால் சுகாதார உபகரணங்களில் வர்ணப் பூச்சு பூசுவதற்காக தவறாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபாய் 3,114,905 ஆன பணத்திலிருந்து 2024.1231 இல் உள்ளவாறு 6 உத்தியோகத்தர் களிடமிருந்து 1,432,562.˙.35 அறவிடப்பட்டு இருக்கவில்லை	அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது, மேலும் மற்ற 04 உத்தியோகத்தளின் ஓய்வூதியத்திலிருந்து செலுத்த வேண்டிய தொகையை அறவிடுவதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	2016 முதல் 2021 வரையான காலப்பகுதியில் மத்திய மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட கண்டி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சம்பள தயாரிக்கும் போது கடைமை நிறைவேற்றிய இரண்டு உத்தியோகத்தரால் அவர்களின் மற்றும் கிட்டியவர்களின் 14 தனியார் வங்கி கணக்குகளுக்கு ரூபா 51,961,088 மற்றும் வங்கி கணக்கு இலக்கத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா 1,027,550 என மொத்தம் ரூபா 53,038,638 தொகை ஒன்றை மோசடியாக அனுப்பிததால் இடம்பெற்ற சம்பள மோசடி தொடர்பாக நிதி பிரமாண 104(4) இன் பிரகாரம் முறையான பரிசோதனை மேற்கொண்டு உரிய தரப்பினரிடம் என்று மோசடி செய்யப்பட்ட தொகையான ரூபாய் 50,440,089 தொகையை அறவிடுவதற்கு உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கு எடுத்திருக்கவில்லை. மேலும், சம்பளப் பொதிகள் தொடர்பான கோப்புகள் மற்றும் ஆவணங்களின் முறையான மற்றும் முழுமையான காப்புப்பிரதியைச் சமர்ப்பிக்காதது, கடவுச்சொற்களை மறந்துவிட்டதமை, தொழில்நுட்பப் பிழைகள் காரணமாக 02 கணினிகளின் காப்புப்பிரதிகளை அணுக முடியாமல் போனது போன்ற காரணங்களால் அந்தக் காலத்திற்கான மொத்த மோசடித் தொகையைத் சரியாக அடையாளம் காண முடியவில்லை.	முக்கிய குற்றவாளிகள் இருவர் மீதும் முறையான ஒழுங்கு நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. மற்றொரு உத்தியோகத்தர் தொடர்பாக தலைமைச் செயலாளரால் ஒரு ஒழுங்கு நடவடிக்கை குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பணிகள் பிரதான அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. நிதிப் பிரமாணம் 104 (4) இன் கீழ் விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின் படி, இந்த மோசடி தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் உதவி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்க தொடர்புடைய தகவல்கள் நியமன அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.	நி.பி 104(4) இன் பிரகாரம் பொறுப்பு கூறவேண்டியவர்க ளிடமிருந்து குறித்த நட்டத்தை அறவிட வேண்டும்.
.(ஊ)	மாரஸ்ஸன பிராந்திய மருத்துவமனையில் கணக்காய்வு திகதியான 2025 ஜனவரி 22, இல் உள்ளவாறு , மருந்துக் களஞ்சியத்தில் ரூபா.919,541 பெறுமதியான 09 காலாவதியான மருந்துகள் இருப்பது கண்டறியப்பட்டது. மாரஸ்ஸன பிராந்திய மருத்துவமனையில் 2019 மே முதல் 2024 ஆகஸ்ட் வரையிலான	ஆரம்ப விசாரணையை நடத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும், குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப விசாரணையை	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	காலகட்டத்தில், ரூபா.2,161,205 பெறுமதியான 141 மருந்துகளில் 302,306 அலகுகள், காலாவதியானதால் பொறுப்பான மருத்துவ அதிகாரி மற்றும் குடும்ப சுகாதாரப் பணியாளர் குடியிருப்புகளில் அவை மழையில் நனைந்து பூச்சிகளால் அழிக்கப்பட்டும் பாதுகாப்பற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தன,	நடத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும், குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தயவுசெய்து தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப விசாரணையை நடத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும், குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தயவுசெய்து தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப விசாரணையை நடத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும், குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தயவுசெய்து தெரிவித்துக் கொள்கிறேன்.	
(எ)	தெரிவு பரிசோதனைன் போது, 03 மாவட்டங்களில் உள்ள 06 பிராந்திய மருத்துவமனைகள் மற்றும் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவில் ரூபா 14,557,718 பெறுமதியான 426 வகையான மருந்துகளின் 1,265,294 அலகுகள் காலாவதியாகி இருந்தன	நிதிப் பிரமாணம் 104 (4) பரிசோதனை குழுவிற்கு அனுப்பி வைத்து விரைவில் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
.(ஏ)	நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் விபத்தக்கள் நட்டங்கள் சேதங்கள் இடம்பெற்ற திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக 04 மாதங்கள் முதல் 13 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அனைத்து வாகன விபத்துகள் தொடர்பாகவும் நி.பி 104(4) பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	நி.பி 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.12 மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை பௌதீக ரீதியாக நிரமாணிக்கப்படாத ராகல பேருந்து நிலையத்தில் உள்ள 79 கடைகளிலிருந்து ரூபா. 8,821,200 கடை	கட்டிடம் கட்டப்படாத இந்த கடைகளிலிருந்து பெற வேண்டிய வாடகை குறித்து பணிப்பாளர் குழுவிடம் அறிக்கையிட்டு	நிர்மாணிக்கப் படாத கடைகளுக்கு வாடகை

	வாடகையாகவும், ரூபா. 441,560 மிகை கட்டணமாகவும் கணக்குகள் காட்டப்பட்டிருந்தன,	தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு செயற்படுவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.	அறவிடுவது சரி செய்யப்பட வேண்டும்.
.(ஆ)	பொது போக்குவரத்தில் உள்ள பலவீனங்களை நிவர்த்தி செய்து, சரியான கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையுடன் பொது சேவைகளை வழங்குதல், தகவல்களைப் பெறுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகிய முக்கிய குறிக்கோளுடன் தற்போது நிலையான வளர்ச்சி தொலைநோக்குடன் செயல்பட்டு வரும் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை கண்டி நகரில் தற்போதுள்ள பேருந்து முனைய செயல்பாட்டை மறுசீரமைப்பதில் ஒரு புதிய படியை எடுத்துள்ளது, கண்டி நகரில் தற்போதுள்ள பேருந்து முனைய செயல்பாட்டிற்கு ஒரு புதிய அனுபவத்துடன், புதிய தோற்றம் மற்றும் புதிய பலத்தை வழங்கும் நோக்கில். உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ், கண்டி நகரில் உள்ள கட்ஸ்ஷெட் பேருந்து நிலையத்தை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் பல்வடிவமைப்பு மாதிரி போக்குவரத்து முனையத்தின் செயல்பாடு மற்றும் முகாமைக்கான திட்டமிடலுக்கான திட்டம், பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தித் திட்டத்திற்கும் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபைக்கும் இடையே 2018 செப்டம்பர் 28 முதல் 03 ஆண்டுகளுக்கு ரூபா 174,172,025 தொகைக்கு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு 05 ஆம் ஆண்டுகபளில் ரூபா 128,186,579 செலவிடப்பட்டு இருந்த போதும் அதில் ரூபா 95,829,962, அதாவது 74.75 சதவீதம் சம்பளம் மற்றும் கூலி மற்றும் பராமரிப்புக்காக செலுத்தப்பட்டிருந்தது, எஞ்சிய 25.24 சதவீதம் திட்டத்தின் நோக்கங்களை அடைய செலவிடப்பட்டிருந்தது, இதன் விளைவாக அதிகாரசபை திட்டத்தின் நோக்கங்களை அடையத் தவறியிருந்தது.	செயற்திட்டததின் ஒப்பந்த உடன்படிக்கையின் படி நிதியத்தை நிர்வகிக்க நடவடிக்கை எடுப்பேன்.	செயற் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதியத்தை பயன்படுத்த வேண்டும்.
.(இ)	மீளாய்வாண்டில் நலன்புரித் திட்டங்களாக அதிகாரசபை ரூபா 3,531,774 தொகையை ஒதுக்கி 2024 சிங்கள-இந்து புத்தாண்டை முன்னிட்டு,	எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன்.	நியதிச் சட்டத்தில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த

	மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் குழுவின் 7 உறுப்பினர்களுக்கும், அதிகார சபையின் அனைத்து நிறைவேற்று நிலை அதிகாரிகள் உட்பட 230 ஏனைய அதிகாரிகள் / ஊழியர்களுக்கும், உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தது.		வேண்டும்.
.(ஈ)	மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் கண்டி மாவட்ட அலுவலகத்தில் பணிபுரியும் முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த 03 உத்தியோகத்தர்கள் செய்த ரூபா 253,400 நிதி மோசடி தொடர்பாக மீளாய்வாண்டு முடிவில் கிட்டத்தட்ட 6 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் நி.பி 104 பரிசோதனையொன்று நடத்தப்பட்டு இழப்பு அறவிடப்பட்டிருக்கவில்லை.	நி.பி 104 பரிசோதனையொன்று நடத்தப்பட்டு விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	பரிசோதனைகளை துரிதப்படுத்த வேண்டும்.
.(உ)	மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையிடம் 2366 GPS சாதனங்களை நிறுவுவதற்காக பணி எஞ்சினி லங்கா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன், ஆனால் அந்த நகம்பனியால் ரூபா 6,645,045 பெறுமதியான 561 GPS சாதனங்களை நிறுவாமல் இருந்ததுடன், அவ்வாறு நிறுவப்படாத GPS சாதனங்கள் குறித்து மீளாய்வாண்டின் இறுதிவரையில் சம்பந்தப்பட்ட பொறுப்பான உத்தியோகத்தர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக பொலிசில் புகார் அளிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.	நிறுவப்படாத GPS சாதனங்கள் குறித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
.(ஊ)	தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டம் தொடர்பாக அதிகாரசபைக்கு கிடைத்த 1650 டிக்கெட் இயந்திரங்களில், 1158 பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கப் பட்டிருந்ததுடன் 143 இயந்திரங்கள் பழுதுபார்க்க கையளிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 218 மற்றும் 274 டிக்கெட் இயந்திரங்கள் செயல்படாமல் மற்றம் மீதமுள்ள டிக்கெட்டுகள் கிட்டத்தட்ட 4 ஆண்டுகளாக வழங்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. அந்த இயந்திரங்களின் பெறுமதி ரூபா 22,623,424 ஆக இருந்தத.	மீதமுள்ள டிக்கெட் இயந்திரங்களை வழங்க பேருந்து உரிமையாளர்கள் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. அதன்படி, டிக்கெட் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.	டிக்கெட் இயந்திரங்களை உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

.(எ)	2024 மாகாண திட்டவட்ட அபிவிருத்தி மேம்பாட்டு மானியங்களின் CPC/TA/P/ 2024/13 ஆம் இலக்க பெறுகையின் கீழ் 36 பயணிகள் தரிப்பிட மேவுகைகளை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரான வெலிஅங்க கன்ஸரக்ஷன் கம்பனி சமர்ப்பித்த கேள்வி ரூபா 8,540,942 ஆக இருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, ஏல மதிப்பீட்டுச் செயல்பாட்டின் போது, தொடர்புடைய ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த ரூபா 9,498,938 என குறிப்பிட்டு அதாவது ரூபா . 957,996 மேலதிக தொகையை சேர்த்து குறித்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா. 9,498,938 ஆன கூடிய விலைக்கு ஒப்பந்தத்தை வழங்கியது, இத தொடர்பாக கணக்காய்வினால் மேறந்கொள்ளப்பட்ட மேலதிக பரிசோதனையின் போது தொடர்புடைய ஒப்பந்தத்தின் கீழ் 40 பயணிகள் தங்குமிடஎ மேவுகைகள் நிர்மாணிக்கப்பட்டஒரு மேவுகைக்காக ரூபா 14,458 வீதம், 40 பயணிகள் தங்குமிட மேவுகைக்காக ரூபா. 578,320 அதிகமாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.	36 பயணிகள் மேவுகைக்காக வெலியங்க கன்ஸ்ட்ரக்ஷன் (தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்) நிறுவனத்தினால் BOQ 01 இன் கீழ் பயணிகள் மேனுவைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 8,540,342 ஆக இருந்தது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் மூலம் கேள்வி மதிப்பீட்டின் போது உருப்படி இலக்கம் 1.5 மற்றும் 1.6 விலை விவரங்கள் சரி செய்யப்பட்டன. BOQ 01 ஒன்றிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டின் ஆரம்பம் ரூபா 9,498,938 ஆக இருந்ததால் ஒப்பந்த காருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை.	கேள்விதாரதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்கள் மாற்றப்படக் கூடாது. அத்துடன் ஒப்பந்தக் காரர்களின் பட்டியல் பிரகாரம் 40 மேவுகை களுக்காக கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 578ஈ360 தொகையை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தால் வேண்டும்.

1.5.13 மத்திய மாகாண வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	அம்பதென்ன இயந்திர பொறியியல் அலுவலகத்தால் பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களுக்கு 2010 முதல் 2024 திசெம்பர் 16 வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத் தொகை ரூபா 12,815,841 உம், 2014 முதல் 2024 திசெம்பர் 18 வரை கிடைக்க வேண்டிய நிலுவை இயந்திர வாடகை வருமானத் தொகை ரூபா 7,129,842 ஆகவும் இருந்தது.	உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளதாக அறிய தருகின்றேன்.	நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும்.
.(ஆ)	2023 நவம்பர் 27 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட 1000 மீற்றர் நீளமாக நிர்மாணிக்கப்பட்ட தலாது ஓயா கந்தகெபுதன்ன வீதியின் (5+300 – 6+300 Km) ABC (Aggregate Base Course) பரப்பும் போது களஞ்சிய (Level Measurement) கணக்கிடாமல் 150 மில்லி மீற்றர் சராசரி தடிப்பான (Thickness) உடன் பரப்புதற்கு இருந்ததாக பட்டியலில் குறிப்பிடப்பட்டு 965 கியுபிகிமீற்றர்(Cu.m) இற்காக ரூபா.	குறித்த வீதியின் Level களுக்கு அளவீடு எடுக்கப்பட்டு குறித்த நிர்மானத்தை மேற்கொண்டால் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து Level அளவீடு பெற்றுக் கொள்ளப்பட்டு நிர்மாணத்தை மேற்கொள்ள வேண்டும். அதற்காக 03 மாதங்களுக்கு மேற்பட்ட கால ஒன்று நிர்மானத்தை மேற்கொள்வதற்கு எடுப்பதுடன்	மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

	5,211,000 ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுந்தது. எனினும் வெளிப் பரிசோதனையின் போது ABC படையின் தடிப்பு 111.3 மில்லி மீற்றராக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 247.7 கியுபிக் மீற்றர். (Cu.m) ABC இற்காக ரூபா. 1,337,580 தொகை ஒப்பந்தகாரருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	அதற்காக Price excalation தயாரிக்கப்பட வேண்டும். 2025 ஆம் ஆண்டு முதல் அனைத்து வீதி நிர்மாணங்களும் Level மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன்.	வேண்டும்.
.(இ)	தலத்துஓயா கந்தகெப்புதென்ன வீதியின் (5+300 – 6+300 Km) நிலக்கீல் Asphalt Wearing போடும் பணியின் போது, 40 மிமீ தடிமன் (Thickness) கொண்ட நிலக்கீல் போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த வீதிக்கு நிலக்கீல் Asphalt Wearing மெட்ரிக் தொன் (MT) 443.78 போடுவதற்கு வழங்குனருக்கு ரூபா 7,601,951 செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறி பணம் செலுத்தப்பட்டது. 2024 ஜனவரி 02 திகதிய ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம், சோதிக்கப்பட்ட Core Thickness தடிமனின் சராசரி தடிமன் 33.125 மிமீ ஆக இருந்த காரணத்தினால் , மேலும் ICTAD Publication No-SCA/5/506.6(a) (i)) இன் படி, Asphalt Wearing போடுவதற்கு ரூபா. 1,520,390 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது	இங்கு, சாலைக்கான முழு அளவிலான Asphalt பெறப்பட்டதன் பின்னர் வீதியில் பரம்பும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரத்தில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக, தேவையான தடிமனை பராமரிக்க முடியவில்லை. இவை இயந்திரங்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் வானிலை காரணமாக ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக ஏற்பட்ட தவறுகள். அதிகபட்ச அளவிற்கு சரியான தரத்தை பராமரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதால், பொது நிதி எந்தவகையிலும் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.	ICTAD Publication No-SCA/5 ශි 506.6 (a) (i) பிரகாரலம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.
.(ஈ)	1000 மீற்றர் நீளத்தில் நிர்மாணிக்கப்பட்ட சாகல கிரிஅல்ல கோமர வீதியின் (0+000 - 1+000 Km) ABC (Aggregate Base Course) இடும் போது மட்ட அளவீடு (Level Measuremente) கணக்கிடப்படாமல் 150 மில்லி மீட்டர் சராசரி தடிப்புடன் ஊற்றுவதற்கு இருந்ததாக அளவீட்டு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 759 கியுபிக் மீட்டர் (Cu.m) இற்காக ரூபா 4,174,500 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எனினும் வெளிக்கள பரிசோதனையின் போது ABC படிவின் சராசரி தடிப்பு 126.3 மில்லி மீற்றராக இருந்த காரணத்தினால் 118.4 மீட்டர் ABC கியுபிக் மீற்றருக்காக (Cu.m) ரூபா 651,315 தொகை ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது	இங்கு ஒப்பந்த காலம் மற்றும் (39) நாட்கள் மட்டப்படுத்தாமல் அளவீடு செய்வதன் மூலம் பொருட்களின் வழங்கள் பயிற்சிக்கப்பட்டது இங்கு குறித்த கோவை அளவிடு ஒப்பந்த தரப்பு நிறைவேற்றுப் பொறியாளர் அலுவலகம், பிரதான பொறியியலாளர் அலுவலகத்தினால் ஒன்றிணைந்த அளவீடு எடுக்கப்பட்டது. அளவீடு மேற்கொள்ளப்பட்ட வீதியின் இடங்களை பரீசிப்பதன் மூலம் உரிய ABC அளவு தீர்மானிக்கப்பட முடியாது இங்கு இட பரிசோதனை மூலம் ABC ෟ அளவு தீர்மானிக்கப்படக் கூடிய ஒரே முறையில் மாஸ் வீதி நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் பயன்படுத்தி Levelling Instrument பயன்படுத்தி 20 mm இடைவெளி மட்டத்துக்கு அடுத்து உரிய ஆரைக்காக அளவினை கணக்கிடும் போதும் கருத்தில் கொள்ள வேண்டிய அளவு வீதியில் குழிகள்	வீதிகளை அமைப்பதற்கு முன், மட்ட அளவீடுகள் எடுக்கப்பட்டு, மதிப்பீடுகள் செய்யப்பட்டு, அதற்கேற்ப கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுதத்ல் வேண்டும்.

		இருந்ததால்உரிய வீதியின் 20 m இடைவெளியில் அளவு எடுப்பதன் மூலம் அதற்கு இடையே காணப்படும் குழிகளுக்கான தேவையான ABC அளவினை தீர்மானிக்க முடியாது. ஆதலால் பெரிய அளவில் காணப்பட்ட இடிந்திருந்து காணப்பட்ட இவ்வீதிக்காக கோப்பு அளவீட்டு முறை மூலம் வந்த அளவினை தீர்மானிக்க மிகவும் நியாயமான முறைமையொன்றாகும். இங்கு கோப்பு மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் குறித்த ABC பரப்புதல் இடம்பெற்றிருந்தது.	
.(உ)	பேரா வளைவு மற்றும் கலஹா பாலங்களின் இரும்பு பாகங்களை கழட்டுவதற்கு முன்னர் இரும்பினை வெட்டி அகற்றுவதற்கு முன்பு கணக்கிடப்பட்டதாகவும், 10,525 கிலோ இரும்பு இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்த போதும், வெட்டப்பட்டு அகற்றப்பட்ட இரும்பின் கிலோ அளவு மற்றும் அந்த இரும்பின் விலைகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் ஏற்பட்ட நட்டத்தை மதிப்பீடு செய்து பொறுப்பான தரப்பினரிடமிருந்து இழப்பை மீட்டெடுப்பதற்கும் அல்லது தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் எதிராக குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்வதற்கும், தேவையான முறையான ஒழுங்கு விசாரணைகளை நடத்துவதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	இந்தக் குழுவின் அறிக்கைகளின் அடிப்படையில், அரசாங்கத்திற்கான பணத்தை மீட்டெடுப்பதற்கும் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் விசாரணைகள் நடத்தப்பட்டு, பொறுப்பான தரப்பினரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கான தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
.(ஊ)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2013 ஜூன் 26 ஆம் திகதிய 10/2013 ஆம் இலக்க பொது நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் 3.2 பந்தியின் படி, அனைத்து நிறுவனங்களும் கொடுப்பனவுகளுக்கான கோரிக்கைகளை முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் இபணிப்பாளர்கள் குழுவின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டும், இருப்பினும், ஜூன் முதல் செப்டம்பர் வரை 13 நிறைவேற்றுத் தர அதிகாரிகளுக்கு தொடர்புடைய அங்கீகாரங்களைப் பெறாமல், வீதி அபிவருத்தி அதிகாரசரபை ரூபா	இந்தக் படிகளை கொடுப்பனவை வழங்குவது தொடர்பாக பணிப்பாளகள் குழுவால் வழங்கப்பட்ட அங்கீகாரம் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகளுடன் மத்திய மாகாணத்தின் தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், 2024.06.27 ஆந் திகதிய இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், மத்திய மாகாணத்தின் தலைமைச் செயலாளர், மத்திய மாகாணத்தின் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடியதாக மாற்றுமாறு CPC/CS/01/24/01/02/01(l) மற்றும் 2024.07.16 திகதிய கடிதம்) மூலம் அறிவித்திருந்தார்.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

	1,300,000 தொகையை நறைவேற்று படிகளாக கொடுப்பனவாக செலுத்தியிருந்தது.		
.(எ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாகன பழுதுபார்ப்புக் கணக்கில் பெறத்தக்க ரூபா. 12,815,841 மீதியில், முறையே 5 ஆண்டுகள், 3 ஆண்டுகள் மற்றும் ஒரு வருடத்திற்கு மேல் வசூலிக்கப்படாத மீதிகளாக ரூபா. 4,321,577, ரூபா. 130,019 மற்றும் ரூபா. 551,386 ஆகியவை அடங்கியிருந்த போதும், முகாமைத்துவம் அதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.	அவ்வாறு அறவிடபப்படாத வருமானத்தை அறவிடுவதற்கு தவறிய பெறவேண்டிய வருமானத்தை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.	அறவிடப்படாத நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
.(ஏ)	ஹாகல கிரியெல்ல கோமராய வீதியில் (0+000-1+000 Km) Asphalt Wearing 3564 சதுர மீட்டர் (sq.m) நிலக்கீல் இடப்பட்டுள்ளதாக பட்டியலல் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், பணம் செலுத்துவதற்கு முன்பு Asphalt Wearing இன் தடிப்பு (Density) அடர்த்தி சோதனை Marshall Density Test அல்லது வேறு எந்த சோதனையும் நடத்தாமல், ஒப்பந்ததாரருக்கு ரூபா 8,910,000 முறையற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது.	• ஆய்வுகூடத்தில் தொடர்புடைய சோதனைகளுக்கான உபகரணங்கள் இல்லை. • வேலை நிர்வாகி மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் நிலக்கீலை சுருக்க தேவையான வெப்பநிலை மற்றும் பயன்படுத்த வேண்டிய சுருக்க கருவிகள் (PTR மற்றும் Static Roller நிலையான உருளை மற்றும் அவற்றின் சுருக்கத்தின் அதிர்வெண்) குறித்து சோதனைகளை மேற்கொள்ளப்படுகின்றன.	தொடர்புடைய Marshall Density Test அல்லது வேறு ஏதேனும் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே பணம் செலுத்தப்பட வேண்டும்.
.(ஐ)	நீலத்தில் 2150 மீட்டர் முதல் நிர்மாணிக்கப்பட்ட கொலபிஸ்ஸ பட்டியகம வீதியில் (6+100-7+630 KM) மற்றும் (5+520-6+100KM) Asphalt ஊற்றும் போது Asphalt wearing 50 தடிப்புடன் (Thickness), Asphalt Binder 32.5 மில்லிமீட்டர் ஆன சராசரி தடிப்பில் (Thickness) ஊற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது இவ்விதிக்கு Asphalt wearing கொள்வனவிற்காக வழங்குனருக்கு 979,89 மெற்றிக் தொன்னிக்காக (MT) ரூபா 25,957,286 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது வெளிக்கள பரிசோதனையின் போது Core Thickness 42.68 மில்லிமீற்றர் இருந்ததால் ICTAD Publication No-ScA/S இன் 506.6(i) இன் 506-5 ஆம் இலக்க ˙ 56 அட்டவணையின் பிரகாரம் கொடுப்பது செய்யக்கூடிய சதவீதத்தின் பிரகாரம் ரூபா 5,191,457 51	ஒரு மைய மாதிரி Core sample பெறப்பட்டது. கொலம்பிஸ்ஸ-பட்டியாகம, தெல்தோட்டை-வாடியகொட, கலஹா, அகிரிய போன்ற பல கிராமங்களுக்கு மேற்கண்ட சாலையில் தினமும் அதிக எண்ணிக்கையிலான பேருந்துகள், லாரிகள் மற்றும் பிற வாகனங்கள் செல்வதாலும், மேற்கண்ட சாலை 2022 ஆம் ஆண்டு கட்டப்பட்டதிலிருந்து, மேற்கண்ட சாலை தற்போது பெரும்பாலான வாகனங்கள் செல்லும் வீதியாக உள்ளது, எனவே நிலக்கீல் அடுக்கு காலப்போக்கில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மோசமடைந்து அதிகமாக சுருக்கப்பட்டுள்ளது, எனவே குறைந்த தடிமன் காட்டுகிறது என்று நிர்வாக பொறியாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.	ICTAD Publication No-ScA/S இன் 506.6(i) இன் 506-5 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தொகை Asphalt wearing இதற்காக கூடுதலாக கொடுப்பினை செய்கின்றது		
	• இந்தச் வீதிக்கு Asphalt Binder கொள்வனவு செய்வதற்காக 600.85 மெட்ரிக் தொன் (MT) இற்காக சப்ளையருக்கு ரூபா 15,916,517 செலுத்தப்பட்டிருந்து. வீதிக்கு Asphalt Binder ஊற்றும் க்கும் போது எந்த நிலை அளவீடும் (level Measurement) செய்யப்படவில்லை, அத்துடன் முழு வீதிக்கும் Asphalt Binder சராசரி தடிமன் 32.5 மிமீ என்று அளவீட்டு பத்திரத்தில் குறிப்பிட்டு பணம் செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், நடத்தப்பட்ட Core Cutting பரிசோதனையின் போது, Asphalt Binder . இன் சராசரி தடிமன் படி சோதிக்கப்பட்ட மைய தடிமன் Core Thickness 22.31 மிமீ ஆக இருந்ததால் Asphalt Binder ரூபா.4,132,504 அதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.	ABB -இற்கான கட்டணங்களைச் செலுத்தும் போது, ICTAD வெளியீட்டு எண் – SCA/S 506.2 இன் படி எடையின் படி தொகை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட சாலையை கொழும்பு - பட்டியகம, தெல்தோட்டை, வாடியகொட, கலஹா, அகிரிய போன்ற பல கிராமங்களுக்கு தினமும் அதிக எண்ணிக்கையிலான பேருந்துகள், லொரிகள் மற்றும் பிற வாகனங்கள் பயன்படுத்துவதால், 2022 ஆம் ஆண்டில் தொடர்புடைய நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து, காலப்போக்கில், அஸ்பொல்ட் . அடுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மோசமடைந்து, அதிகமாக சுருக்கப்பட்டு, குறைந்த தடிமன் காட்டுவதாக நிறைவேற்று வாகப் பொறியாளர் சுட்டிக்காட்டியுள்ளார். பணம் செலுத்துவதற்கு முன், தொடர்புடைய ஆய்வுகளின் அளவீட்டு முடிவுகளின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட வேண்டும்.	கொடுப்பனவு செய்வதற்கு முன், தொடர்புடைய பரிசோதனைகளின் அளவீட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட வேண்டும்.
.(ஒ)	கொலபிஸ்ஸ பட்டியகம வீதியின் 6+100-7+630 KM) மற்றும் (5+520-6+100 KM) பிரிவுகளின் நிர்மாணப் பணிகள் 2022 ஒக்டோபரில் திட்டமிடப்பட்டுள்ளன, மேலும் 2022 செப்டம்பரில் கூகிள் வரைபடத்திற்காக எடுக்கப்பட்ட புகைப்படங்களின் படி, இந்த வீதி நல்ல நிலையில் இருப்பதாகவும், தேவையான வளர்ச்சி மட்டத்தில் இல்லை என்றும் காணப்பட்டது. அதன்படி, இந்தத் தொழிலுக்கு செலவிடப்பட்ட ரூபா. 48,967,365 தொகை விளைவற்ற செலவினமொன்றாகும்.	சம்பந்தப்பட்ட வீதியில் நிலக்கீல் போடுவதற்கு பொதுமக்களிடமிருந்து பல கோரிக்கைகள் வந்தன, மேலும் டெல்டோட்டா பிராந்திய மேம்பாட்டுக் குழுக்களிலும் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, அந்த நேரத்தில் நிலக்கீல் பயன்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து நிர்மாண வேலைத்தளம் வரை 2022 ஆம் ஆண்டின் விதிகளின் கீழ் இதைச் செய்ய தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், 7,630 கிமீ முதல் 5,500 கிமீ வரையிலான பகுதியில் சாலை மோசமடைந்து, சாலையில் ஒரு குன்றும் குழியுமான தன்மை மற்றும் சீரற்ற மேற்பரப்பாக இருந்தது.	முறையான சாத்தியவள ஆய்வின் மூலம் பொருத்தமான வீதிகளைத் தெரிவு செய்து , அந்தச் வீதிகளில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டின் போது ரூபா 5,437,600 செலவிடப்பட்டு, நலன்புரி திட்டமொன்றாக 2024 சிங்கள- இந்து புத்தாண்டிற்காக ஒரு உணவுப் பொதி ரூபா 9,710 பெறுமதியான 560 உலர் உணவு பொதிகளை வழங்க ஏற்பாடுகள்	எதிர்காலத்தில், பொருட்களை வழங்கும் போது, எந்த தரப்பினர் நன்மையைப் பெற வேண்டும் என்பதை நாங்கள் மீள்பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன்.	நியதிச் சட்டத்தில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

செய்யப்பட்டன, ரூபா 165,070 பெறுமதியான 17 பொதிகள் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உட்பட 06 அதிகாரிகள், தலைமைச் செயலகத்தின் தலைமைச் செயலாளர் உட்பட 04 அதிகாரிகள், ஆளுநர் அலுவலக ஆளுநர் உட்பட 03 அதிகாரிகள் மற்றும் அதிகாரசபையின் பணிப்பாளர்கள் குழுவின் தலைவர் உட்பட 04 அதிகாரிகள் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக, ஏனைய 543 உணவுப் பொதிகள் பகிரந்தளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்.்.ஊழியர்களின் பெயர்கள் கணக்காய்விறகாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், அது முறையாகவும் முறையாகவும் சமர்ப்பிக்கப்பாதிரந்ததுடன் . 2024.12.31 இல உள்ளவாறு நிரந்தர, அமைய், பதிலால் மற்றும் ஒப்பந்த ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 368 ஆக இருந்ததால், 192 பொதிகள் ் கூடுதலாகப் பெறப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி , ரூபா 1,864,320. ஆக இருந்தது.

1.5.14 தலைப்பு 580- மத்திய மாகாண கைத்தொழிலர் அமைச்சு

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 30/2019 இல் 02.1 பந்தி மற்றும் தாபன விதிக்கோவையின் II தொகுதியில் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13: 2 உப பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆரம்ப புலனாய் ஒன்றையும் தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு உரிய தரப்பினர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் மாகாண கைத்தொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 02 ஆரம்ப புலனாய்வுக்கு உரியதாக பரிசோதனை நடவடிக்கைகள் 05 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகள் கடந்திருந்த போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக.	சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவை யின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.15 தலைப்பு 581202- மத்திய மாகாண புடவை வேலைத்தள தாபித்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பான வர்த்தக முற்பணக் கணக்கு

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல்	2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகள்	கடன்பட்டோர் மீதிகளை தீர்வு

	உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் 05 ஆண்டுகளை கடந்த மொத்த கடன்பட்டோர் மீதியான ரூபா. 11,933,833 தொகை தீர்வு செய்யப்படாமல் இருந்தன. அக்கடன்பட்டோர் மீதியில் 2017 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை ரூபா. 11,729,885 ஆன கடன்பட்டோர் மீதிகளில் எவ்வித தொகையான்று அறவிடுவதற்கு 2024 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	தொடர்பான நி.பி. 104(4) இன் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அப்பரிசோதனையின் பரிந்துரைகளின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பேன்.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும்.
(ஆ)	மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் 05 ஆண்டுகளை கடந்த மொத்த கடன் கொடுத்தோர் மீதிகள் ரூபா. 944,002 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அக் கடன் கொடுத்தோர் மீதியில் எந்தவொரு தொகையொன்றும் 2024 ஆம் ஆண்டின் போது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இனங்காணப்பட்ட பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு எஞ்சிய அளவினை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.16 தலைப்பு 591- மத்திய மாகாண விவசாய திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்தினன் கீழ் உள்ள நாலந்தா மாவட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்திற்கு சேதனஉர உற்பத்தித் திட்டத்திற்காக ரூபா. 17,876,476 பெறுமத யான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்ட போதிலும், மீளய்வாண்டடிற்களக்குள் அந்த உபகரணங்கள் மற்றும் பொருட்கள் பயன்படுத்தப்படாமல் கிட்டத்தட்ட 03 ஆண்டுகள் கடந்திருந்தன.	இரசாயன உரங்களின் பயன்பாட்டிலிருந்து சேதன உரங்களின் பயன்பாட்டிற்கு மாறுவதற்கான அரசக் கொள்கைத் திட்டத்தின் பிரகாரம் உபகரணங்கள் மற்றும் ,ரசாயனங்கள் பெறப்பட்டுள்ளன என்பதையும், அரசகொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் உரப் பயன்பாடு மற்றும் விற்பனை குறைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.	சொத்துக்களை ஆக்கபூர்வமதாக பயன்படுத்த வேண்டும்.
(ஆ)	நல்ல விவசாய நடைமுறைகள் மூலம் ஆரோக்கியமான மற்றும் தரமான விவசாய பொருட்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 2023 முதல் மத்திய மாகாணத்தில் GAP கிராமத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது, அதன் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளால் தொழில்நுட்பக் குழுவின் விவரக்குறிப்புகளின் படி, கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக அதன்	இதுவரை அந்தத் தொகையில் ரூபா 10 மில்லியன் தொகையொன்று விவசாயிகளின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, இன்னும் ரூபா.2842271.87 தொகையை விவசாயிகளுக்கு செலுத்த வேண்டியுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பெறுமதியில் 50 சதவீதத்தை, அல்லது அதிகபட்சமாக ரூபா. 50,000 இற்கு உட்பட்டு, விவசாயிகளுக்கு செலுத்த மாகாண விவசாயத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் 126 விவசாயிகள் தொடர்புடைய பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்த போதிலும், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அரசின் பங்களிப்பாக ரூபா 3,842,272 செலுத்தப்படவில்லை.

1.5.17 தலைப்பு 592- மத்திய மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த மாடுகள் / எருமை மாடுகள் பண்ணைகளின் எண்ணிக்கை 24,126 ஆக இருந்த போதும் அதில் தொழிற்பாட்டில் உள்ள பண்ணைகளின் 6,480 ஆக இருந்ததால் 17,646 பண்ணைகள் அதாவது 73 சதவீதம் தொழிற்பாடற்று காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் பசு மாடு, எருமை மாடு மற்றும் ஆட்டு பண்ணைகளின் எண்ணிக்கை 24,008 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு 11,112 ஆக இருந்ததால் 2023 ஆம் ஆண்டின் போது அப்பண்ணைகளின் எண்ணிக்கை 12,896 ஆல் குறைவடைந்து இருந்தமை அவ்வாறே உள்நாட்டு பால் உற்பத்திற்கு பிரதான பங்களிப்பொன்றை வழங்கும். பசு மாடுகள், எருமை மாடுகள் பண்ணைகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டின் போது 11,338 ஆக இருந்ததுடன் அது 2023 ஆம் ஆண்டில் 7239 ஆக இருந்தமையால் பண்ணைகளின் எண்ணிக்கை 4,099 ஆல் அதாவது 36 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.	தனியார் முயற்சியாளர்களே கால்நடை கட்டுப்பாட்டில் ஈடுபடுமகின்றனர். பொருளாதார ரீதியில் இலாப நிலைமையொன்றை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் கால்நடை கட்டுப்பாட்டிற்கு விரும்பிச் செல்ல இயற்கையான நிலைமை யொன்றாகும். இத்திணைக்களத்தின் மூலம் கால்நடை கட்டுப்பாட்டில் ஈடுபடும் பண்ணைகளுக்கு சேவை வழங்கப்பட்டு வரவுடன் அச்சேவை வழங்குவதைத் செயற்றிறனாக நிறைவேற்றுவதற்காக கடுமையான ஊழியர் பற்றாக்குறையொன்று காணப்படுவதாக	கால்நடை கட்டுப்பாட்டில் ஈடுபடும் விவசாய அகத்துறையில் தரித்து வைத்திருப்பது தொடர்பாக பொருத்தமான வேலைத் திட்டமொன்றினை தயாரித்த செயற்படுத்த வேண்டும்.
(ஆ)	ஆண் பெண் சமூக தன்மை உள்ளடக்கப்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டம் (EGSD) இன் கீழ் கால்நடை மருத்துவ சேவைகளை விரிவுபத்தும் நோக்கில் அம்பகமுவ பிரதேச செயலக பிரிவின் ஹட்டன் மற்றும் தலவாக்கல கால்நடை மருத்துவ அலுவலகங்களுக்கு oxfarm தனியார் நிறுவனத்தின் மூலம் ஆய்வுகூட	கட்டிடங்களை அமைக்கும் போது நீர் உரிய வகையில் வெளியேறுவதற்கு மாற்று வழி ஏற்படுத்தப்படவில்லை எனவும் கட்டிடத்தினை முடியுமான வகையில் பராமரிப்பதற்காகவும், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்கள் தொடர்பான பொருத்தமான நிறுவனங்களை தெரிவு செய்து	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டியதுடன் உபகரணங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் ஹட்டன் கால்நடை அலுவலகத்திற்காக ரூபா.4,152,631 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 787.44 சதுர அடி அளவிலான கட்டிடம் 4 ஆண்டுகள் கடந்திருந்த போதும் ஆய்வுகூட சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இக் கட்டிடத்தில் பால் மற்றும் சாணம் என்பவற்றுடன் அண்மித்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த 24 ஆய்வுகூட உபகரணங்களில் 16 உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததாக அறிய தருகின்றேன்.

1.5.18 தலைப்பு 593- மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஒக்டோபர் 04 ஆந் திகதிய 2091/51 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி இவ்வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 2017 இன் 05 ஆம் இலக்க மத்திய மாகாண நீர்ப்பாசன நியதிச்சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 07 ஆண்டுகள் கடந்திருந்த போதும் சாசனத்தின் II ஆம் பகுதியின் 7 (5) ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண நீர்ப்பாசன திணைகளத்தின் விடயப் பரப்பிற்குரிய நீர்ப்பாசன முறைமைகள் கமநல சேவைகள் அல்லது கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் இனங்காணப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வு அறிக்கை மற்றும் வரைவு வர்த்தமானி அறிவித்தல் மத்திய மாகாண விவசாய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்தவுடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. .	நீர்ப்பாசன சாசனத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.